தமிழ்நாடு
# நுகர்விழி
நுகர்வோரின் மூன்றாவது கண்!
மாத இதழ்

10/- மலர் - 16 இதழ் - 03 மார்ச் - 2022 TAMILNADU NUGARVIZHI

facebook TNCPO Chennai

# பால் முதல் தேன் வரை





கலப்படங்களைக் கண்டறிய எளிய வழிகள்!

PUBLISHED BY: TAMILNADU CONSUMER PROTECTION ORGANISATION CHENNAI



**D.C.ஜான்இளங்கோ**
மாநிலத் தலைவர் மற்றும்
காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர்
81227 35037



**K.தாந்தோணி**
மாநில இளைஞர் அணி தலைவர்
அயன்புரம் மண்டல செயலாளர்
99625 26601



**N.புண்ணியமூர்த்தி**
மாநிலச் செயலாளர்,
தென்மண்டலம்
99411 80631



**D.விஜய்**
மாநில துணைத் தலைவர்
திருவொற்றியூர் மண்டல தலைவர்
99404 77815



**G.அருணகிரி**
தலைவர், கணினி குற்றங்கள்
விழிப்புணர்வு குழு
98410 50681



**M.பிரபாகர்**
மாநில துணைச் செயலாளர்
94443 31396



**L.மயில்வாகனம்**
மாநில அமைப்புச் செயலாளர்
96001 29030



**M.R.ஆனந்தன்**
மாநில துணைச் செயலாளர்
98846 68673



**சிந்து R.சுப்பிரமணியம்**
மாநில துணைப்பொதுச் செயலாளர்
98431 88657



**K.தனசேகர்**
மாநில துணை பொதுச் செயலாளர்
98410 91317



**பிரகளாத்தலாய்**
மாநில உதவித் தலைவர்
99417 95151



**N.ரங்கசாமி**
மாநில இணைச் செயலாளர்
96005 24750



**J.செல்வம்**
மாநில அமைப்பாளர்
82200 82727



**S.ராஜேந்திரன்**
கே.கே.நகர் பகுதி நிர்வாகி
91762 93525



**S. கபிபுல்லா**
பாடி பகுதி ஒருங்கிணைப்பாளர்
74015 55372



**A.ராமதாஸ்**
வடசென்னை மாவட்ட நிர்வாகி
99419 87794

தமிழ்நாடு

# நுகர்விழி

நுகர்வோரின் மூன்றாவது கண்!

மாத இதழ்

## வாசகர் கவனத்திற்கு

தமிழ்நாடு நுகர்விழி வாசகர்கள் தொடர்ந்து அளித்துவரும் ஆதரவை வரவேற்று தங்களை பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

மேலும் தங்களின் கருத்துக்கள், கட்டுரைகள், வினாக்கள், விமர்சனங்கள், தங்கள் பகுதியில் பொது மக்களுக்கு செய்த உதவிகள் போன்றவற்றை எங்க ளுடைய தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள் கிறேன். நாங்கள் அதை இப்புத்தகத்தில் பிரசுரிக்கிறோம்.

நன்றி, வணக்கம்.

### அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:


ஆசிரியர்

**தமிழ்நாடு நுகர்விழி**

எண்.359 G, கொன்னூர் நெடுஞ்சாலை
பில்கிங்டன் சாலை சந்திப்பு (சயானி
தியேட்டர் பஸ் நிலையம் அருகில்)
அயன்புரம்,
சென்னை – 600 023.
தொலைபேசி எண்: 044–43324844
கைபேசி எண்: 9444909993



இதழில் வெளிவரும் விளம்பரங்கள் நம்பகத் தன்மைக்கு "தமிழ்நாடு நுகர்விழி" பொறுப்பல்ல. நேர்காணல் மற்றும் சிறப்பு கட்டுரையாளரின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துகளே. பிரஸ் அண்டு ரெஜிஸ்ட்ரேஷன் ஆஃப் புக்ஸ் ஆக்டின்படி செய்திகளின் தேர்வுக்கு செய்தி ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.


## உள்ளே...


வாகனச் சட்டம்... எதற்கெல்லாம் அபராதம் விதிக்கப்படும் — 08

2 நோயாளிக்கு ரூ.1 கோடி வரை இழப்பீடு! — 05

ஏடிஎம்மில் பணம் வராமல் கணக்கில் கழிந்து விட்டதா? — 21

பால் முதல் தேன் வரை கலப்படங்களைக் கண்டறிய எளிய வழிகள்! — 10

# தலைக்கவசம்! உயிர்க் கவசம்!!





டாக்டர்
**N.கண்ணையா**, Phd
முதன்மை ஆசிரியர்



**C.பால் பர்ணபாஸ்**
நிர்வாக ஆசிரியர்
மற்றும் வெளியீட்டாளர்

உயர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி தமிழகத்தில் தலைகவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. "தலைக்கவசம் உயிர்க்கவசம்" என்ற கருத்துப்படி தமிழகத்தில் வாகன ஓட்டிகள் தினந்தோறும் நடைபெறும் விபத்துக்களை கருத்தில்கொண்டு, தலைக்கவசம் அணிந்து வாகனம் ஓட்டுகின்றனர்.

சென்னையில் 2017-ம் ஆண்டு நிகழ்ந்த வாகன விபத்துகளில் 1347 பேர் உயிரிழந்துள்ளனர். 7,200 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இரு சக்கர வாகன விபத்துகளில் 731 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

சென்னை பெருநகரத்தை பொறுத்தவரை வாகன போக்குவரத்தும் நெரிசல் நிறைந்த நகரமாகும். பாதாள சாக்கடை குழியால் பெரும் வேதனை அடைந்து வருகிறார்கள். மழை காலங்களில் சொல்லவே வேண்டாம். ஆமை வேகத்தில் வாகனங்கள் நகர்ந்து செல்வ தால் மக்கள் மிகுந்த வாகன நெரிசலில் சிக்கி தவிக் கிறார்கள்.

தலைக்கவசம் அணி வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாத சிலர் போக்குவரத்து காவல்துறை அலுவலர்களை ஒற்றுமையில் பேசுவதும் தகாத செயல்களில் ஈடுபடுவதும் அண்மையில நடைபெற்றது. காவல் துறையினர் தங்கள் கடமைகளை செய்யும்போது பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் தலைக்கவசத்தின் அவசியம் தமிழகத்தில் அனைத்து பட்டி தொட்டிகள் முழுவதும் பரவும். திரைப்படத்துறையில் தங்கள் சினிமா காட்சிகளில் இது குறித்த விழிப்புணர்வு ஏற்படும் வகையில் காட்சிகள் அமைத்தால் நன்று.

காவல்துறையினர் குறுஞ்சாலைகள், தெருக்கள் போன்ற பகுதிகளில் தலைக்கவசம் தணிக்கை செய்வதை தவிர்க்கலாம். நெடுஞ்சாலைகளில் செல்லும்போது நடவடிக்கை மேற்கொண்டால் வாகன ஓட்டிகள் மகிழ்வார்கள்.

தமிழக அரசை பொறுத்தமட்டில் தலைகவசம் அணிவதை சட்டமாக்கியதைப்போல் சென்னையில் கரடு முரடாக உள்ள சாலைகளை சீரமைத்து மழைநீர் கால் வாயில்களை, குடிநீர் வாரியம் தோண்டிய பள்ளங்களை சீரமைக்க, வேகமாக பணியை முடிக்கவும், மழைக்காலங்களில் போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதிகளை ஆராய்ந்து காவல் அலுவலர்களை நியமிக்கவும் வேண்டும்.

# 2 நோயாளிக்கு ரூ.1 கோடி வரை இழப்பீடு!

## ஜான்சன் அண்ட் ஜான்சனுக்கு உத்தரவு

**தடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சையால் பாதிக்கப்பட்ட 2 நோயாளிகளில் ஒருவருக்கு ரூ.90.26 லட்சமும், மற்றொருவருக்கு ரூ.1.01 கோடியும் இழப்பீடு வழங்க ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்துக்கு மத்திய மருத்துவ தர கட்டுப்பாட்டு அமைப்பு உத்தரவிட்டுள்ளது.**

ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்தின் ஏஎஸ்ஆர் செயற்கை மூட்டு பல்வேறு நோயாளிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அறுவை சிகிச்சையில் ஏற்பட்ட தொடர் தோல்விகளை அடுத்து, ஜான்சன் நிறுவனம் தான் தயாரித்த 93,000 ஏஎஸ்ஆர் செயற்கை மூட்டுகளை 2010ம் ஆண்டு திரும்பப்பெற்றது.

பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அவர்களுக்கு ஏற்பட்ட உடல் பாதிப்பு வயது உள்ளிட்டவற்றை கருத்தில் கொண்டு ரூ30 லட்சம் முதல் ரூ.1.23 கோடி வரை இழப்பீடு வழங்காமல் என்ற அரசு நிபுணர் குழுவின் பரிந்துரைக்கு கடந்த ஆண்டு நவம்பரில் மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.




இந்த நிலையில் மும்பையை சேர்ந்த நோயாளி தொடர்ந்த வழக்கில் மகாராஷ்டிர அரசின் மத்திய மருந்து தர கட்டுப்பாட்டு அமைப்பின் நிபுணர் குழு பரிந்துரைப்படி ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சையால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு ரூ.74,57,180 இழப்பீடு வழங்க கடந்த மார்ச் மாதம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது இந்த குழுவின் பரிந்துரைப்படி வழங்கப்பட்ட முதல் இழப்பீடு உத்தரவு இதுவாகும் இதை தொடர்ந்து டெல்லியை சேர்ந்த நோயாளிக்கு ஏப்ரல் மாதம் இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டது.

இதுபோல் உத்தர பிரதேசத்தை சேர்ந்த 2 நோயாளிகள் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் தயாரித்த செயற்கை இடுப்பு எலும்பு மூட்டு பொருத்திய பிறகு கடும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இவர்கள் தொடர்ந்த வழக்கை விசாரித்த மத்திய மருந்து தர கட்டுப்பாட்டு அமைப்பு ஒருவருக்கு ரூ.90.26 லட்சமும் மற்றொரு நோயாளிக்கு ரூ.1.01 கோடியும் இழப்பீடு வழங்க உத்தரவிட்டுள்ளது என சுகாதார அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார் ஏற்கனவே ஜான்சன் நிறுவனத்தின் பேபி பவுடரில் ஆஸ்பெஸ்டாஸ்துகள் கலந்திருப்பது பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இதை தொடர்ந்து இந்த பவுடர் விற்பனையை தடை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுபோல் இந்த நிறுவனத்தின் இடுப்பு எலும்பு செயற்கை மூட்டு பொருத்தியதால் பாதிப்புக்கு ஆளாகும் நோயாளிகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. ●

# கொடிகட்டி பறக்கும்

# கல்வி வியாபாரம்

**பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையில் இவ்வளவு கட்டணம் என்று குறிப்பிடப்பட்டும், நன்கொடை என்னும் பெயரில் பெரிய அளவில் வசூல்வேட்டை நடந்து வருகிறது. கூடுதல் கட்டணம் வசூலிப்பவர்கள் மீது நடவடிக்கை பாயும். அதன் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்று அரசு அறிவித்தாலும் நடக்கும் கட்டணக் கொள்ளையை தடுக்க முடியாத அவலநிலையே உள்ளது.**

கல்வி பெறுபவர்கள் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்து வரும் நிலையில், கல்வி நிறுவனங்களின் தரம் கற்பிக்கும் ஆசிரியர்களின் திறன், பாடத்திட்டம், நிர்வாகம் ஆகியவற்றில் பல குறைபாடு உருவாகி, தமிழக கல்வித்தரம் கேள்விக்குறியாகியுள்ளது என்பதை வெளிப் படையாக காண முடிகிறது.

மாநிலத்தின் சமூக தேவைக்கும், வளர்ச்சிக்கு மான அடிப்படையில் கல்வி விரிவாக்கம் இருக்க வேண்டும். ஆனால்,



வியாபார நோக்கில் கல்வி விரிவாக்கம் என்ற நிலையே உள்ளது. தமிழகத்தில் உள்ள தனியார் கல்லூரிகள், தனியார் பள்ளிகளில் நடக்கும் கட்டண முறைகேடுகள் குறித்து அதிகளவில் குவியும் புகார் மீது தமிழக அரசு, எந்த நடவடிக்கையும் எடுப்பதே இல்லை.

இன்ஜினியரிங், மருத்துவ படிப்புகளை விட அதிகமாக இளங்கலை, இளம் அறிவியல், பட்டப் படிப்பு பாடங்களுக்கு மவுசு கூடியுள்ளது. இந்த இடங்களுக்கு இடம் பிடிக்க தனியார் கல்லூரிகளில் மாணவர்கள், பெற்றோர்கள், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு நன்கொடை கொடுத்து இடம் வாங்க வேண்டிய அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

கல்வித் துறையில் நடக்கும் முறைகேடு களுக்கு எதிராக சட்டம் தன் கடமையை செய்யத் தவறி னால் மாணவர்களின் கல்வித்தரம் கேள்விக் குறியாகிவிடும். அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள், கல்வியின் தரத்திலும் மாணவர்களின் முன்னேற்றத் திலும் தனிக்கவனம் செலுத்துவதே இல்லை.

அதேபோல, தனியார் மெட்ரிக் பள்ளிகளில் 25 சதவீத சலுகை பெறும் மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் நடைமுறை எல்லா தனியார் பள்ளிகளிலும் உள்ளது. அதையும் தடுக்க வேண்டும்.

மத்திய, அரசு, உடனுக்குடன் சலுகை கட்டணத்தை சம்பந்தப் பட்ட பள்ளிகளுக்கு வழங்காமல் காலம் தாழ்த்துவது பெற்றோர் களுக்கு சிரமத்தை தருகிறது. எனவே, மத்திய, மாநில அரசுகள், கல்வித் துறையில் கவனம் செலுத்தினால் மட்டுமே வளமான எதிர்கால மாணவர்களைப் பெறமுடியும்.






# வாகனச் சட்டம்... எதற்கெல்லாம் அபராதம் விதிக்கப்படும்?

**வாகன சட்டத்தில் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள்.**

*ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டுபவருக்கு எவ்வளவு அபராதத் தொகை விதிக்கப்படுகிறது?*

ஒருவருக்கு வாகனம் ஓட்டத் தெரியும் என்பதை உறுதி செய்வதே வாகன ஓட்டுநர் உரிமம்தான்.

ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனங்களை ஓட்டி வருவது வாகனத் தணிக்கையின்போது கண்டறியப்பட்டால் மோட்டார் வாகனச் சட்டம் 181, விதி 3 மற்றும் 4ன் கீழ் அபராதம் விதிக்கலாம்.

நண்பர் அல்லது பிறரது வாகனங்களை இரவல் வாங்கி சிலர் ஓட்டுவார்கள்.

அப்படி ஓட்டுபவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் பிடிபட்டால் அவருக்கு அபராதம் விதிக்கப்படும்.

அதுமட்டுமின்றி, ஓட்டுநர் உரிமம்






இல்லாதவருக்கு வாகனம் வழங்கியதற்காக அதன் உரிமையாளருக்கும் அபராதம் விதிக்கப்படும்.

வாகனக் காப்பீடு சான்று இல்லாமல் வாகனம் ஓட்டினால் அபராதம் விதிக்கப்படுமா?

வாகனக் காப்பீடு மிக அவசியம்.

விபத்துக் காலங்களில் நமக்கு அல்லது வாகனங்கள் சேதமடைந்தால் காப்பீடு நடப்பில் இருந்தால் மட்டுமே காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் இழப்பீடு பெறமுடியும். அதற்காகவே காப்பீடு சான்று இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

காப்பீடு சான்று இல்லாமல் வாகனங்களை இயக்குவது வாகனத் தணிக்கையின்போது கண்டறியப்பட்டால் மோட்டார் வாகனச் சட்டம் 146, 196ன் கீழ் அபராதம் விதிக்கப்படும்.

ஹெல்மெட் மற்றும் சீட் பெல்ட் அணியாமல் இருந்தால் அபராதம் விதிக்கப்படுமா?

விபத்து நேரிடும்போது வாகன ஓட்டுநர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவே தலைக்கவசம், சீட் பெல்ட் அணிய வலியுறுத்தப்படுகிறது. இதைப் பின்பற்றாமல் இருப்பது விதிமீறலாகும். இதற்கு மோட்டார் வாகனச் சட்டம் 177ன்படி அபராதம் விதிக்கலாம்.

பேருந்தில் பயணிக்கும்போது சலுகை பாஸ் அல்லது டிக்கெட் இல்லாமல் பயணம் செய்வோருக்கு என்ன தண்டனை?

போக்குவரத்து துறையினர் மட்டுமின்றி வட்டார போக்குவரத்து துறையினரும் பேருந்துகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளலாம்.

அந்த ஆய்வின்போது டிக்கெட் அல்லது பாஸ் இல்லாமல் பயணிப்போருக்கு மோட்டார் வாகனச் சட்டம் 178ன் கீழ் அபராதம் விதிக்க முடியும்.

வாகனத் தணிக்கையில் ஈடுபடும் அதிகாரிகளிடம் முறையான தகவல் அளிக்காமல், ஒழுங்கீனமான முறையில் நடந்து கொண்டால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

வாகனத் தணிக்கை என்பது சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு அனைவரும் வாகனங்களை இயக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் மேற்கொள்ளப்படுகிறது.

வாகனத் தணிக்கை சமயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்கும் தகவலை வழங்காமலும், ஒழுங்கீனமாகவும் நடந்து கொண்டால் இரண்டுக்கும் மோட்டார் வாகனச் சட்டம் 179 (1) மற்றும் (2)ன் கீழ் அபராதம் விதிக்க முடியும்.

ஒருவரது வாகன ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்பட்ட பின்னரும் அவர் வாகனத்தை இயக்கினால் என்ன தண்டனை?

ஒருவர் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டி விபத்து ஏற்படுத்தினால், அவரது ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்படும்.

ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்பட்ட பின்பும் ஒருவர் வாகனங்களை இயக்கினால் அவருக்கு மோட்டார் வாகனச் சட்டம் 182 (1)ன் கீழ் அபராதம் விதிக்க முடியும்.

தூக்கத்தில் ஓட்டினால் துக்கமே வரும்!

**கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பொருள்களைச் சாப்பிடுவதால் உடலில் நச்சு சேர்கிறது.**

அஞ்சறைப் பெட்டி பொருள்கள் தொடங்கி நாம் அன்றாடம் பயன்படுத்தும் எல்லாப் பொருள்களிலுமே வியாபித்துவிட்டது கலப்படம். கலப்படத்தில் இரண்டு வகை உண்டு. பொருளாதார லாபத்துக்காகத் தெரிந்தே செய்வது... தற்செயலாக நடைபெறுவது. தற்செயலாக நடைபெறுவது பெரும்பாலும் வீட்டில்தான். அம்மாவோ, மனைவியோ அஞ்சறைப் பெட்டியில் வைத்திருக்கும் கடுகுடன், சீரகம் கலந்துவிடுவதைப் போன்று. அதில் ஆபத்து இல்லை. ஆனால் லாப நோக்குக்காக அத்தியாவசியப் பொருள்களிலும், அன்றாடம் பயன்படுத்தும் உணவுப் பொருள்களிலும் கலப்படம் செய்வதால் உடல்நலம் நிச்சயம் பாதிக்கப்படும்.

கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பொருள்களை சாப்பிடுவதால் உடலில் நச்சு சேர்கிறது. நச்சின் அளவு அதிகரிக்கும்போது இதயச் செயலிழப்பு, கல்லீரல், சிறுநீரகம் போன்றவை பாதிக்கப்பட்டு உயிருக்கே ஆபத்தாக முடியும். தரமான உணவைச் சாப்பிடும்போது கிடைக்க வேண்டிய ஊட்டச்சத்துகள், கலப்படம் செய்யப்பட்ட உணவுப்பொருள்களைச் சாப்பிடுவதால் கிடைக்காமல் போய்விடும். இதனால் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படும். கலப்படமில்லாத தரமான உணவுப் பொருள்களை வாங்கிப் பயன்படுவதில் நுகர்வோரான நமக்கும் பெரும் பொறுப்பு உள்ளது.

பரபரப்பான வேலைச் சூழலில் எந்த ஆய்வகத்தைத் தேடிச் சென்று உணவுப் பொருளில் கலப்படம் இருப்பதைக் கண்டுபிடிக்கமுடியும்... எளிய வழி இருந்தால் சொல்லுங்கள் என்கிறீர்களா?

வீட்டிலேயே கலப்படத்தைக் கண்டறியும் வழிமுறைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளது டில்லியைச் சேர்ந்த வாய்ஸ் என்ற அமைப்பு. நுகர்வோர் நலனுக்காக 35 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் இந்த அமைப்பு மத்திய அரசுடன் இணைந்து உணவுப் பொருள்களில் உள்ள கலப்படத்தைக் கண்டறியும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

நம் அன்றாட பயன்பாட்டில் தவிர்க்க முடியாத உணவுப் பொருள்கள் சிலவற்றில் இருக்கும் கலப்படத்தை வீட்டிலேயே கண்டறியும் எளிய வழிமுறைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

பொதுவாக, கனம் அதிகமுள்ள பொருள்கள் நீரில் மூழ்கும். இலகுவான பொருள்கள் நீரில் மிதக்கும். இயற்கை நிறம் கொண்ட உணவுப் பொருள்களைத் தண்ணீரில் போட்டால் நிறம் மாறாது.



செயற்கை நிறமூட்டப்பட்டிருந்தால் அதன் சாயம் நீரில் இறங்கும். இந்த இரண்டு அடிப்படை அறிவியல் டெக்னிக்கையும் பயன்படுத்தி பெரும்பாலான கலப்படங்களைக் கண்டறியலாம்.

இனி கலப்படத்தைக் கண்டறியும் எளிய முறைகளைப் பார்ப்போம்.

# பால் முதல் தேன் வரை

## கலப்படங்களைக் கண்டறிய எளிய வழிகள்!



### பால்

* பாலில் தண்ணீர் கலப்பைக் கண்டறிய, ஒரு சொட்டுப் பாலை வழவழப்பான, சாய்வான தளத்தில் விட வேண்டும். கலப்படமில்லாத பால் என்றால் அது அப்படியே நிற்கும் அல்லது மெதுவாக வழியத் தொடங்கும். பால் வழிந்து வந்த பாதையில் வெள்ளை நிறத் தடம் இருக்கும். தண்ணீர் சேர்க்கப்பட்ட பால் என்றால் தளத்தில் விட்ட உடனேயே வழிந்து விடும். வந்த இடத்தில் தடம் எதுவும் இருக்காது.

* பாலில் டிடர்ஜென்ட் கலப்படத்தைக் கண்டறிய, 5 10 மி.லி.



தன்மையைக் கண்டறிய முடியும். ஒரு ஏர் டைட் டப்பாவில் டீத்தூளைக் கொட்டி இறுக மூடி வையுங்கள். 24 மணி நேரம் கழித்து டப்பாவைத் திறக்கும்போது காற்றோட்டமில்லாத கெட்ட மணம் வீசினால் அது, கலப்படத்தூளேதான். டப்பாவைத் திறக்கும்போது டீத்தூளின் சுண்டி இழுக்கும் மணம் உண்மையாக வந்தால், 'then its time for a cup of tea'.

## தேங்காய் எண்ணெய்

* தேங்காய் எண்ணெய் உறையும் தன்மை உடையது. அதனுடன் பிற எண்ணெய் கலந்திருப்பதைக் கண்டுபிடிக்க ஒரு கண்ணாடி டம்ளரில் தேங்காய் எண்ணெய்யை ஊற்றி ஃபிரிட்ஜில் சில மணி நேரம் வைத்து (ஃபிரிட்ஜில் உள்ள ஃபிரீஸரில் வைக்கக் கூடாது) எடுங்கள். கலப்படமில்லாத தேங்காய் எண்ணெய்

பாலுடன், அதே அதே அளவு தண்ணீர் சேர்த்து ஒரு டப்பாவில் ஊற்றி, டப்பாவை மூடி நன்றாகக் குலுக்க வேண்டும். டப்பாவைத் திறந்து பார்க்கும்போது அடர்த்தியான நுரை படர்ந்திருந்தால் அதில் டிடர்ஜென்ட் கலந்திருக்கிறது. மெல்லிய நுரை இருந்தால் கலப்படம் இல்லை.

* பால் பொருள்களான பன்னீர், கோவா போன்றவற்றில் ஸ்டார்ச் கலந்திருப்பதைக் கண்டறிய, அவற்றில் 3 மில்லி அளவுக்கு எடுத்து அதனுடன் 5 மில்லி தண்ணீர் சேர்த்து வேகவைக்கவேண்டும். வேக வைத்து ஆறிய பின் அதன் மேல் 2, 3 துளி டிஞ்சர் ஐயோடின் கரைசலைத் தெளித்தால் நீல நிறமாக மாறிவிடும். பாலிலும் ஸ்டார்ச் கலந்திருப்பதைக் கண்டறிய அதன்மீது நேரடியாக இதே கரைசலைச் சேர்க்கலாம். நீல நிறமாக மாறினால் கலப்படம் இருப்பது கன்ஃபார்ம். நிறம் மாறாவிட்டால் கலப்படம் இல்லை.

## டீத்தூள்

* ஒரு கரண்டி டீத்தூளை கண்ணாடி டம்ளரில் போட்டு அதில் சூடான தண்ணீரை ஊற்றுங்கள். நல்ல டீத்தூள் என்றால் தண்ணீரின் நிறம் மாற 3 நிமிடங்கள் எடுக்கும். அதுவே கலப்பட டீத்தூள் என்றால் 30 விநாடியில் நிறம் மாறிவிடும்.

* டீத்தூளின் மணத்தை வைத்தே அதன்



உறைந்திருக்கும். கலப்படம்இருந்தால் அதில் இருக்கும் தேங்காய் எண்ணெய் உறைந்தும், கலக்கப்பட்ட வேறு எண்ணெய் உறையாமலும் இருக்கும்.

## தேன்

* சுத்தமான தேன் தண்ணீரில் கரையாது. தண்ணீருடன் கூடிய கண்ணாடி டம்ளரில் ஒரு ஸ்பூன் தேன் விட்டுக் கலக்குங்கள். கரையாமல் தேங்கினால் அது சுத்தமான தேன். நீரில் கரைந்தால் அதனுடன் சர்க்கரை கலந்திருக்கிறது என்று புரிந்துகொள்ளுங்கள்.

* ஒரு குச்சியைத் தேனில் முக்கி அதை தீக்குச்சியால் பற்ற வையுங்கள். `சுர்' என்ற சத்தத்துடன் தீப்பற்றி எரிந்தால் அது சுத்தமான தேன். சர்க்கரை கலந்திருந்தால் தீப்பிடிக்காது.

## சர்க்கரை

*சர்க்கரையில்சாக்பீஸ்பவுடர்கலந்திருப்பதைக் கண்டறிய, ஒரு ஸ்பூன் சர்க்கரையை ஒரு டம்ளர் தண்ணீரில் போடுங்கள். சிறிது நேரத்தில் உண்மையான சர்க்கரை கரைந்துவிடும். சாக்பீஸ் பவுடர் டம்ளரின் அடியில் படியும்.

## மஞ்சள்தூள்

* மஞ்சள்தூளைத் தண்ணீரில் போட்டால், இளம் மஞ்சள் நிறமாக மாறி, டம்ளரின் அடியில் படிய வேண்டும். அடர் மஞ்சள் நிறத்தில் மிதந்தால் அது கலப்படத்தூள்.

## தானியங்கள்

* கேழ்வரகு, கோதுமை, சோளம் போன்ற தானியங்களைத் தண்ணீரில் போடும்போது அதில் செயற்கை நிறம் கலந்திருந்தால் தண்ணீரின் நிறம் மாறிவிடும்.

## மிளகாய்த்தூள்

* மிளகாய்த்தூளை ஒரு டம்ளர் தண்ணீரில் போடுங்கள். சுத்தமான மிளகாய்த்தூள் நீரில் மிதக்கும்.

## மிளகு

* மிளகுடன் பப்பாளி விதைகள் கலப்பதையும் கண்டறிய இதே தண்ணீர் டெக்னிக்தான். பப்பாளி விதையைக் காட்டிலும் எடை அதிகம் என்பதால் மிளகு, தண்ணீரின் அடியில் தங்கும்.



பப்பாளி விதை நீரின் மேல் மிதக்கும்.

## புகார் அளியுங்கள்!

உணவுப் பொருள்களில் கலப்படம் கண்டறியப்பட்டால், உடனே அதை இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தில் (FSSAI) புகார் தெரிவிக்கலாம். நுகர்வோரிடமிருந்து அதிக புகார்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது ஆணையம். அதே போன்று நாம் வாங்கும் உணவுப்பொருளில் கலப்படம் இருப்பதை ஆய்வகத்தின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள நினைத்தால், FS-SAIன் ஆய்வகங்கள் இந்தியா முழுவதும் 72 இடங்களில் உள்ளன. தமிழகத்தில் சென்னையில் 2 ஆய்வகம் உட்பட, கோவை, மதுரை, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி என 7 இடங்களில் உள்ளன. ஒருவேளை நீங்கள் எடுத்துச் செல்லும் உணவுப்பொருளில் கலப்படம் இருப்பது ஆய்வகச் சோதனையில் உறுதி செய்யப்பட்டால், ஆய்வுக்காக நீங்கள் செலுத்திய கட்டணம் உங்களுக்கே திருப்பி அளிக்கப்படும்.

# அனுமதியின்றி வைக்கப்படும் கொடிக்கம்பங்கள் ஆக்கிரமிப்புதான்’

## ஐகோர்ட்டு உத்தரவு

அனுமதியின்றி சாலையோரங்களில் கொடிக்கம்பங்கள் வைக்கப்பட்டால், அதை ஆக்கிரமிப்பாகத்தான் கருத முடியும் என்று சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.



பொது இடங்களில் அரசியல் கட்சிகளின் கொடிக்கம்பங்கள் வைக்க தடை விதிக்கக்கோரியும், அந்த கொடிக்கம்பங்களை அகற்றக்கோரியும் சேலத்தை சேர்ந்த ஏ.ராதாகிருஷ்ணன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை ஐகோர்ட்டு விசாரித்து கொடிக்கம்பங்கள் குறித்து அனைத்து மாவட்ட கலெக்டர்களிடம் இருந்து தனித் தனியாக அறிக்கை பெற்றது. இந்தநிலையில், இந்த வழக்கை நீதிபதிகள் எஸ்.மணிக்குமார், சுப்பிரமணியம் பிரசாத் ஆகியோர் விசாரித்தனர்.

பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

### சட்டங்கள் உள்ளன

பொதுச்சாலை, நடைபாதை என்று பொதுஇடங்களில் உள்ள ஆக்கிரமிப்பால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுத்துகிறது. இதுபோன்ற பொதுஇடங்களில் யாரும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்பதற்காகத்தான் தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம், தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் உள்ளன.

இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை முதலிலேயே தடுக்கவும் வேண்டும். கலெக்டர்கள் அறிக்கையின் அடிப்படையில் பார்க் கும்போது, தமிழகம் முழுவதும் ஆயிரக்கணக்கான கொடிக்கம்பங்கள் உள்ளன. அதில், 2 கம்பங்கள் மட்டுமே முறையான அனுமதியுடனும். 3 கம்பங்கள் கோர்ட்டு உத்தரவின்படியும் வைக்கப்பட்டுள்ளது.

### ஒழுங்கு நடவடிக்கை

அனுமதியின்றி கொடிக்கம்பங்கள் வைக்கப்பட்டால், அதை ஆக்கிரமிப்பாகத் தான் கருத முடியும். எனவே, சாலையோரம், நடைபாதையோரம் ஆக்கிரமிப்பு செய்து கொடிக்கம்பங்களை வைப்போர் மீது நெடுஞ் சாலைத்துறை, உள்ளாட்சி துறை அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். பொதுசொத்துக்கு சேதாரம் ஏற்பட்டு இருந்தால், அதற்குரிய இழப்பீட்டு தொகையை வசூலிக்கவேண்டும்.

இந்த நடவடிக்கைகளை எல்லாம் சட்டப்படி எடுத்து, அதுகுறித்த அறிக்கையை மாவட்ட கலெக்டர்களிடம் சம்பந்தப்பட்ட களப்பணியில் ஈடுபடும் அதிகாரிகள் தாக்கல் செய்யவேண்டும். ஒருவேளை இந்த அதிகாரிகள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையை கலெக்டர் எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# பயணிக்கு ரூ.15 ஆயிரம் இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

**தனியார் பேருந்து நிறுவனத்தின் கவனக் குறைவால் காயமடைந்த பயணிக்கு ரூ.15 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

இது தொடர்பாக திருப்பூர் மாவட்டம் தாசம்பாளையத்தைச் சேர்ந்த ஜி.பிரகாஷ் கோவை மாவட்ட நுகர்வோர் குறைதீர்மன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:–

சென்னையில் இருந்து அவிநாசி வருவதற்காக கடந்த 2016 பிப்ரவரி 18–ம் தேதி கோவை புலியகுளத்தில் உள்ள தனியார் பேருந்து நிறுவனத்தில் முன்பதிவு செய்திருந்தேன். அன்றைய தினம் அந்த நிறுவனத்தின் பேருந்தில் பயணித்தபோது ஓட்டுநரின் இருக்கைக்கு அருகே மேலே இருந்த படுக்கை திடீரென எனது தலையில் விழுந்தது.

இதனால், மண்டை உடைந்து ரத்தம் கொட்டியது. ஆனால், பேருந்தின் நடத்துநரோ, ஓட்டுநரோ எனக்கு எந்த உதவியும் செய்ய வில்லை. சக பயணிகள் முதலுதவி பெட்டியை கேட்ட போது பேருந்தில் முதலுதவி பெட்டி இல்லை என நடத்துநர் தெரிவித்தார். அருகில் உள்ள மருத்துவமனையில் பேருந்தை நிறுத்துமாறு கூறியும் அவர்கள் நிறுத்தவில்லை கடைசியில் அவிநாசி பேருந்து நிலையத்துக்கு முன்பே என்னை இறக்கிவிட்டு சென்றுவிட்டனர். பின்னர் அவ்வழியாக வந்த ஒரு வாகனத்தில் ஏறி அவிநாசியில் உள்ள மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். மேட்டார் வாகன சட்டப்படி பயணிகள் பேருந்தில் கட்டாயம் முதலுதவி பெட்டி இருக்க வேண்டும் பயணத்தின் போது பயணிகளில் யாருக்காவது உடல் நலக்குறைபாடு ஏற்பட்டால், அந்த முதலுதவி பெட்டியிலுள்ள சாதனங்களை பயன்படுத்தி முதலுதவி செய்து, அருகிலுள்ள மருத்துவ மனையில் அனுமதிக்க வேண்டும் ஆனால், இதை ஏதும் அவர்கள் செய்யாதது சேவை குறைபாடாகும். இதுதொடர்பாக தனியார் பேருந்து நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பியும் அவர்களிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. எனவே, எனக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு உரிய இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கோரியிருந்தார்.

மனுவை விசாரித்த கோவை மாவட்ட நுகர்வோர் குறைதீர்மன்றத்தின் தலைவர் ஏ.பி.பாலசந்திரன் உறுப்பினர் ஆர்.டி.பிரபாகர் ஆகியோர் பிறப்பித்த உத்தரவு பேருந் தில் பயணித்தபோது மனுதாரரின் தலையில் அடிபட்டது ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. பேருந்து நிறுவனத்தின் கவனக்குறைவால் மனுதாரர் பாதிக்கப்பட் டுள்ளார்.



எனவே, அவருக்கு ஏற் பட்ட மன உளைச்சலுக்கு இழப்பீடாக ரூ.15 ஆயிரத்தை 9 சதவீத வட்டியுடன் பேருந்து நிறுவனம் அளிக்க வேண்டும். அதோடு வழக் குச் செலவாக ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் உத்தரவிட்டனர்.

# பேடிஎம்மில் பணம் போடுபவரா? உஷார்!

**பே-டிஎம்மில் கேஷ்பேக் சலுகையை பயன்படுத்தி பல கோடி ரூபாயை ஏப்பம் விட்டுள்ளனர்.**

ஆன்லைனில் பொருட்கள் வாங்குவது. டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துவது என இருந்த இடத்திலேயே ஆர்டர் செய்யும் வழக்கம் அதிகரித்து வருகிறது உணவு முதல் உடை காலணி என அனைத்துமே ஆன்லைன் மயமாகிவிட்டது. 20%ல் பண மதிப்பு நீக்கம் செய்யப்பட்ட பிறகுதான் இப்படி ஒரு விஸ்வரூப வளர்ச்சி.

ஆரம்பத்தில் டிஜிட்டல் பரிவர்த்தனை வளர்ந்ததற்கு பண தட்டுப்பாடு காரணமாக இருந்தது. இப்போது அப்படி அல்ல. பணப்பழக்கம் முன்பை விட அதிகரித்துள்ளது. இருந்தாலும், டிஜிட்டலுக்கு மாறியதற்கு காரணம் கேஷ்பேக் சலுகை மழைதான்.


கடைகளில் தள்ளுபடியால் வாடிக்கையாளர் களை கவர்வதை போல, இணையதளம் மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் கேஷ்பேக் சலுகைகள் வாடிக்கையாளர்களை கண்டி இழுக்கின்றன. பெரும்பாலான ஆன்லைன் வர்த்தக நிறுவனங்கள், தள்ளுபடியுடன் கேஷ்பேக் சலுகைகளையும் வாரி வழங்குகின்றனர்.


அதிலும் டிஜிட்டல் பரிவர்த்தனைக்கு முன்னோடியாக வாலட் வசதியை கொண்டு வந்த பே-டிஎம் இந்த சந்தர்பத்தை நன்றாகவே பயன்படுத்திக் கொண்டது. பே-டிஎம் வாலட்டில் பணம் போட்டு வைத்து சின்னச் சின்ன கேஷ் பேக்கிற்கு கூட சில்லரைக்கு பதில் மொபைல் ஸ்கேன் செய்ய கியூ ஆர் கோடு தேடியவர்கள் தான் அதிகம்.

ஆனால், கேஷ்பேக் சலுகை கிடைக்கவில்லை வங்கிக்கு பணம் அனுப்பியும் போகவில்லை என பொதுமக்கள் சிலர் கூறுகின்றனர்.

போதாக்குறைக்கு கேஒய்சி விதிகளை பூர்த்தி செய்த பிறகும் பலர் கேஷ்பேக் சலுகையை எதிர்பார்த்து ஏமாந்து போனார்கள், ஏறக்குறைய






புலிவால் பிடித்த கதையாக இது மாறிவிட்டது. பேடிஎம் வாலட்டில் பணத்தை போட்டுவிட்டு கேஷ்பேக் கிடைக்கிறதா என ஸ்மார்ட்போனை தடவித்தடவி பார்த்தவர்கள் தங்கள் வாலட் காலியாகி விட்டதே என்று வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

அப்புறம் எங்கேதான் இந்த கேஷ்பேக் போகிறது என்கிறீர்களா? இங்கேதான் ஒரு மெகா மோசடியே அரங்கேறி இருக்கிறது, பே–டிஎம் நிறுவனம் பே–டிஎம்மால் என்ற ஆன்லைன் ஸ்டோரில் பல பொருட்களை விற்கிறது இதில்தான் பே–டிஎம்மால் ஊழியர்கள் மற்றும் வியாபாரிகள் சேர்ந்து 10 கோடி ரூபாய் வரை கேஷ்பேக் மோசடி செய்துள்ளனர்.

இதுதொடர்பாக 10 ஊழியர்களை பே–டிஎம் நிறுவனம் பணி நீக்கம் செய்துள்ளது. பே–டிஎம்மால் இணையத்தளத்தில் பட்டியலிட்டிருந்த 100 வியாபாரிகள் நீக்கப்பட்டுள்ளனர். பே–டிஎம்மாலில் கடந்த தீபாவளிக்கு பிறகு சில வியாபாரிகள் அதிகமாக கேஷ்பேக் பெற்றுள்ளனர். இது தொடர்பாக நடந்த கணக்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பே–டிஎம் நிறுவனர் விஜய் சேகர் ஷர்மா கூறியதாவது: கடந்த தீபாவளி பண்டிகைக்கு பிறகு, சில சிறு வியாபாரிகள் மிக அதிகமாக கேஷ்பேக் சலுகைகளை பெற்றுள்ளனர் என்பது எங்கள் கவனத்துக்கு வந்தது. இதை அடுத்து, மேற்கண்ட பரிவர்த்தனைகள் தொடர்பாக விரிவான கணக்கு தணிக்கை மேற்கொள்ளுமாறு எங்களது கணக்கு தணிக்கை நிறுவனத்திடம் கேட்டுக் கொண்டோம்.

அப்போது, சில வியாபாரிகள், எங்கள் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்காக ஆர்டர்கள் போட்டு இந்த மோசடியை அரங்கேற்றியுள்ளனர். விசாரணையில் ரூ5 கோடி முதல் ரூ10 கோடி வரை கேஷ்பேக் மோசடி நடந்திருப்பதாக தெரிய வந்துள்ளது. கேஷ்பேக் சலுகைகள் பணமாக பே–டிஎம்மால் ஊழியர்களின் வங்கிக் கணக்கிற்கு சென்றுள்ளது. இந்த மோசடியில் ஈடுபட்ட 10 ஊழியர்களை பணி நீக்கம் செய்துள்ளோம். தவிர இதில் ஈடுபட்ட 100 வியாபாரிகள் பே–டிஎம்மால் இணையதளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# அது என்ன Article 370 ?

**தற்போது விவாத பொருளாகியுள்ள இந்த அரசியல் சாசன சட்டத்தை பார்ப்போம்.அதில் இடம் பெற்றுள்ள சலுகைகளை காண்போம்.**

இந்தியாவில் உள்ள மற்ற மாநில மக்கள் ஏன் இந்த சட்டத்தை எதிர்க்கிறார்கள். என்று பார்ப்போம். கடைசி வரை படித்து பாருங்கள் நீங்களும் article 370 ஐ எதிர்ப்பீர்கள்.

1. காஷ்மீர் மாநிலத்தில் உள்ள மக்கள் இரட்டை குடியுரிமை கொண்டவர்கள். அவர்கள் இந்தியாவிலும் குடியேறலாம் பாகிஸ்தானிலும் குடியேறலாம்.
2. ஜம்மு காஷ்மீருக்கு என்று தனி கொடி உள்ளது. அங்கு இந்திய தேசியக் கொடியை அவமதித்தாலும் அது தேச துரோகம் கிடையாது.
3. ஜம்மு காஷ்மீரில் மாநில அரசு 6 ஆண்டுகள் பதவியில் இருக்கலாம். ஆனால் நம்மை போன்ற மற்ற மாநிலங்களில் 5 வருடங்கள்தான் வெற்றி பெற்ற அரசு ஆட்சி அமைக்க முடியும்.
4. இந்திய கொடி, தேசிய சின்னங்கள் மற்றும் தேசிய கீதத்தை அவமதித்தால் அங்கு அது தவறு கிடையாது என்று article 370 இல் உள்ளது.
5. இந்தியாவின் உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் அனைத்து உத்தரவுகளும் காஷ்மீரை தவிர அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும்..
6. பாராளுமன்றத்தால் ஜம்மு காஷ்மீரில் உள்ள சில இடங்களுக்கு மட்டுமே சட்ட திருத்தங்களை செய்ய உரிமை உள்ளது.
7. ஜம்மு காஸ்மீரில் உள்ள ஒரு பெண் மற்ற





மாநிலங்களில் உள்ள ஒரு ஆணை திரு மணம் செய்தால் அந்தப் பெண்ணிடம் உள்ள காஷ்மீருக் கான. குடியுரிமை பறிக்கப்படும். அதே அந்த பெண்.பாகிஸ்தானில் இருக்கும் ஒரு ஆணை திருமணம் செய்தால் அந்தப் பாகிஸ்தான் ஆணுக்கும் இந்தியக் குடியுரிமை அளிக்கப்படும்.இதனால் பாகிஸ்தானில் இருந்து பல்வேறு பிரிவினைவாத தலைவர்கள் இந்தியாவின் உள்ளே வருகின்றனர்.

8. அரசியல் சாசன சட்டம் 370 காரணமாக இந்தியாவின் RTI, RTE மற்றும் CAG போன்ற எந்த சட்டமும் ஜம்மு காஷ்மீரில் செல்லாது..

9. இஸ்லாமியர்கள் பின்பற்றும் சரியத் சட்டம் ஜம்மு காஷ்மீரில் நடைமுறையில் உள்ளது.பஞ் சாயத்து போன்ற அமைப்புகளுக்கு அங்கு உரிமை இல்லை.மேலும் ஜம்மு காஷ்மீரில் சிறுபான்மையினராக உள்ள சீக்கியர்கள் மற்றும் இந்துக்களுக்கு 16 சதவீதம் இடஒதுக்கீடு இல்லை..

10. article 370 படி இந்தியாவின் மற்ற மாநிலங் களில் உள்ள மக்கள் ஜம்மு காஷ்மீரில் நிலங் களை வாங்க முடியாது.சொந்த நாடாக இருந்தாலும் நமக்கு உரிமைகள் அங்கு மறுக்கப்படும்.

11. காஷ்மீரி பெண்களை திருமணம் மட்டும் செய்து கொண்டு பாகிஸ்தானியர்கள் இந்திய குடிமகனாக மாற முடியும். ஆனால் இந்தியாவில் உள்ள மற்ற மாநில மக்கள் காஷ்மீரி பெண்களை திருமணம் செய்து கொண்டு காஷ்மீரில் குடியுரிமை வாங்க முடியாது..

12. காஷ்மீரில் உள்ள மக்களுக்கு என்று இந்திய அரசு வரிச்சலுகை செய்ய வேண்டும் என்று article 370 கூறுகிறது. இதற்காக மட்டும் இந்தியா பல்லாயிரக்கணக்கான கோடிகளை செலவு செய்கிறது.அத்தனையும் நமது வரிப்பணம். நமது வரிப்பணத்தில் இலவசங்களை அனுபவித்து விட்டு, இந்திய தேசிய சின்னங்களை அவமதித்து விட்டும், நமது பாதுகாப்பு படை வீரர்களை கோழைகள் போல முதுகில் குத்தி கொலை செய்யும் இவர்களுக்கு article 370 தேவையா? சீனா திபெத்தை கைப்பற்றிய போது அங்குள்ள கிளர்ச்சியாளர்களை அடக்க சீன மக்களை அங்கு குடியமர்த்தியது. அதே போன்று நாமும் செய்தால் தான் காஷ்மீரில் அமைதி நிலவும்.அதற்கு article 370 ஐ நீக்க வேண்டும் சுதந்திரம் அடைந்ததில் இருந்து காஷ்மீரை இந்தியாவிடம் இருந்து கைப்பற்ற பாகிஸ்தான் எவ்வளவோ சித்து விளையாட்டுகளை செய்து நம் நிலத்தை அபகரிக்க பார்த்தது. ஜம்மு காஷ்மீரில் இருக்கும் 7 மாவட்டங்கள் தான் இந்தியாவிற்கு எதிராக செயல்பட பாகிஸ்தானால் தூண்டி விடப்பட்டு தீவிரவாதத்தில் ஈடுபடுகின்றனர்.அந்த மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான மக்கள் தீவிரவாதத்திற்கும் பாகிஸ்தானுக்கும் ஆதரவு தெரிவிப்பவர்கள்.அவர்களை தமிழ்நாட்டில் உள்ள சிலர் விடுதலை வீரர்களாக சித்தரித்து வருகின்றனர் என்பது மன வேதனையை தருகிறது. உங்க வீட்டை ஒருவன் ஆக்கிரமித்துக்கொண்டு உங்களை அங்கு இருந்து விரட்டினால் நீங்கள் அவனிடம் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவீர் களா அல்லது அவனை அங்கிருந்து அடித்து விரட்டுவீர்களா ? நேதாஜி வழியில் சென்றால் தான் நாமும் நம் நாடும் அமைதியாக இருக்கும்.. ஜெய்ஹிந்த் வந்தேமாதரம்

**கடந்த 2018 ம் நிதியாண்டில் 'பேங்கிங் ஓம்பட்ஸ்மேன்' எனப்படும் வங்கி தீர்ப்பாயத்துக்கு வங்கி வாடிக்கையாளர்களிடமிருந்து வந்த புகார்களில் சுமார் 16,000 புகார்கள், அதாவது மொத்த புகார்களில் 10 சதவிகிதம், ஏடிஎம்மில் பணம் எடுக்கும்போது அக்கவுன்டில் பணம் பிடிக்கப்பட்டும், கையில் பணம் வரவில்லை என்ற வகையைச் சேர்ந்தவைதான்.**

இத்தகைய புகார்கள் அதற்கு முந்தைய ஆண்டைக்காட்டிலும் 50 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்று ரிசர்வ் வங்கி வெளியிட்ட புள்ளிவிவர தகவல் மூலம் களிடமிருந்து வந்த புகார்களில் சுமார் 16,000 புகார்கள், அதாவது மொத்த புகார்களில் 10 சதவிகிதம்,ஏ.டி.எம்.மில் பணம் எடுக்கும்போது அக்கவுன்டில் பணம் பிடிக்கப்பட்டும், கையில் பணம் வரவில்லை என்ற வகையைச் சேர்ந்தவைதான். இத்தகைய புகார்கள் அதற்கு முந்தைய ஆண்டைக்காட்டிலும் 50 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்றும் ரிசர்வ் வங்கி வெளியிட்ட புள்ளிவிவர தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், இவ்வாறு ஏ.டி.எம்.மில் பணம் வராமல், அதேசமயம் உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து பிடிக்கப்பட்ட பணம், புகார் பெறப்பட்ட ஏழு வேலை தினங்களுக்குள்




தெரியவந்துள்ளது.

ஏ.டி.எம்.மில் பணம் எடுக்கும்போது அக்கவுன்டில் பணம் பிடிக்கப்பட்டும், கையில் பணம் வரவில்லை என்றால் அந்தப் பணம் மீண்டும் நமது அக்கவுன்டுக்கு வந்துவிடும். ஆனால், அப்படி அக்கவுன்டில் பணம் கிரெடிட் ஆவதில் தாமதம் ஏற்பட்டால், அதற்கு இழப்பீடு பெறலாம் என ரிசர்வ் வங்கி விதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018ம் நிதியாண்டில் 'பேங்கிங் ஓம்பட்ஸ்மேன்' எனப்படும் வங்கி தீர்ப்பாயத்துக்கு வங்கி வாடிக்கையாளர் மீண்டும் உங்கள் அக்கவுன்ட்டுக்கு வரவில்லை என்றால், தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் 100 ரூபாய் என்ற கணக்கில், சம்பந்தப்பட்ட வங்கியிடமிருந்து நீங்கள் இழப்பீடாகப் பெறலாம் என ரிசர்வ் வங்கியின் விதி கூறுகிறது. இந்த விதி 2011ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி முதல் அமலில் உள்ள போதிலும், இது குறித்து பெரும்பாலான வாடிக்கையாளர்கள் அறியாமல் உள்ளனர்.

உங்கள் ஏ.டி.எம். கார்டை, நீங்கள் கணக்கு வைத்துள்ள வங்கி ஏடிஎம்மிலோ அல்லது வேறு வங்கி ஏடிஎம்மிலோ, எதில்




# ஏடிஎம்மில் பணம் வராமல் கணக்கில் கழிந்து விட்டதா?

பயன்படுத்தி இருந்தாலும் சரி, கணக்கில் பிடிக்கப்பட்ட பணம் உங்கள் கைக்கு வராமல் போனால் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்த ரிசர்வ் வங்கியின் விதிமுறைகள்:

1 . கணக்கு வைத்திருக்கும் சொந்த வங்கியின் ஏ.டி.எம். அல்லது மற்ற வங்கியின் ஏடிஎம் அல்லது ஒயிட் லேபிள் ஏ.டி.எம். ( White label ATMs) எனப்படும் வங்கி சாராத நிதி நிறுவனங்களின் ஏடிஎம் என எந்த ஏ.டி.எம்.மில் பயன்படுத்தி இருந்தாலும், உடனடியாக இது தொடர்பாக உங்களுக்கு ஏடிஎம் கார்டு கொடுத்த வங்கியிடம் புகார் அளிக்க வேண்டும்.

2 . ரிசர்வ் வங்கி விதிப்படி, ஏ.டி.எம். எந்திர பாக்ஸில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பெயர்கள், அவர்களது தொலைபேசி எண்(கள்)/ கட்டணமில்லா பேசும் எண்கள் (Toll free)/ உதவி கோரும் ஹெல்ப் டெஸ்க் (Help Desk) எண்கள் ஆகியவை தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். இதேபோன்று ஒயிட் லேபிள் ஏ.டி.எம்.களிலும் புகார் தெரி விப்பதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின்/ உதவி கோரும் எண்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

3 . ஏ.டி.எம்.மில் பணம் வராமல், அதே சமயம் உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து பணம் பிடிக்கப்பட்டு விட்டால், உங்களுக்கு கார்டு வழங்கிய வங்கி, புகார் பெறப்பட்ட ஏழு வேலை நாள்களுக்குள் அந்தப் பணத்தை மீண்டும் உங்கள் அக்கவுன்ட்டுக்கு கிரெடிட் செய்ய வேண்டும்.

4. அவ்வாறு புகார் அளித்தும், ஏழு வேலை தினங்களுக்குள் உங்கள் பணம், உங்கள் அக்கவுன்டில் மீண்டும் வரவு வைக்கப்படாவிட்டால், தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் இழப்பீடாக 100 ரூபாய் வீதம் கணக்கிட்டு, அந்தப் பணத்தைச் சம்பந்தப்பட்ட வங்கி , உங்கள் அக்கவுன்டில் கிரெடிட் செய்ய வேண்டும். அதே சமயம், இந்த இழப்பீட்டைப் பெற நீங்கள் உங்கள் புகாரை, உங்கள் ஏ.டி.எம். பரிவர்த்தனை நடந்த 30 தினங்களுக்குள் பதிவு செய்ய வேண்டும்.

5. இதையும் மீறி உங்கள் புகாருக்கு உரிய தீர்வை நீங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கி தீர்த்து வைக்காமல் போனாலோ அல்லது வங்கியின் நடவடிக்கை உங்களுக்குத் திருப்தி அளிக்காமல் போனாலோ, நீங்கள் இதுகுறித்து சம்பந்தப்பட்ட வங்கியிடமிருந்து பதில் கிடைத்த 30 தினங்களுக்குள் வங்கி தீர்ப்பாயத்துக்குப் புகார் அளிக்கலாம். ஒருவேளை உங்கள் வங்கி, உங்களுக்கு எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லை என்றாலும், வங்கி யிடம் புகார் கொடுத்த 30 தினங்களுக்குள் வங்கி தீர்ப்பாயத்திடம் புகார் அளிக்கலாம்.



# நீரின்றி அலையும் தமிழகம்...

**இந்த திட்டங்கள் முறையாக செயல் படுத்தப்பட்டிருந்தால் சென்னை இத்தனை அல்லோகலப்பட்டிருக் காது என்பதுதான் உண்மை.**

சென்னைல நல்ல மனுசங்க இல்ல, நல்ல மனசு இல்ல, அதனால மழையில்ல, வெள்ளம் வந்து ஊரையே அடிச்சுட்டு போய்ருதுன்னு சென்னைவாசிகளை எப்போதுமே சபித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த செய்தி என்னவோ பெரும் வரப்பிரசாதம் போல் ஆகிவிட்டது.

ஐ.டி. நிறுவனங்களையும் தாக்கிய தண்ணீர் பஞ்சம் : OMR in Water Scarcity

சென்னை ஓ.எம்.ஆர். பகுதியில் கிட்டத்தட்ட 650 ஐ.டி. நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இரவு பகல் என்று பாராமல் 365 நாட்களுக்கும் அங்கு பணிகள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமே இருக்கின்றது. 3 லட்சம் ஊழியர்கள் பணியாற்றும் அந்த பகுதிகளையும் விட்டுவைக்கவில்லை தண்ணீர் பஞ்சம்.

குடிப்பதற்கு, கழிவறையில் பயன்படுத்துவதற்கு, ஏ.சி. மற்றும் இதர தேவைகளுக்கு நீர் மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. மெட்ரோ தண்ணீர் வராத காரணத்தால் தெருக்களில் தண்ணீர் லாரிகளுக்காக மக்கள் காத்துக் கொண் டிருக்க, தண்ணீருக்கான பெரும் தேவையை கொண்டிருக்கும் ஐ.டி. நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்வது கடினமாகிக் கொண்டே வருகின்றது.

அந்த 650 நிறுவனங்களில் ஏற்கனவே 12 நிறுவனங்கள், தண்ணீர் தட்டுப்பாடு மிக அதிகமாக இருப்பதால் நீங்கள் வீட்டிலிருந்தே தங்களின் வேலையை தொடரலாம் என்றும், அதிக தண்ணீர் தட்டுப்பாட்டினை நீங்கள் எதிர்கொள்கின்றீர்கள் என்றால் உங்களின் சொந்த ஊர்களுக்கு சென்று பணியை தொடரலாம் என்று அறிவுறுத்தியுள்ளது.

ஐ.டி. நிறுவனங்களுக்கு இந்த நிலை என்றால், பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்சாலைகள் என எங்கும் தண்ணீர் இல்லாமல் தவித்து வருகின்றனர் பொதுமக்கள்.

### தற்காலிக தீர்வுகள் பயன் தராது

தமிழகத்தின் மேற்கு எல்லையில் தண்ணீருக்கு எப்போதும் பெரிய அளவில் தட்டுப்பாடு உருவாவதில்லை. காரணம், அங்கிருக்கும் இயற்கை சூழ்நிலை. மூன்று மாநிலங்களுக்கும் அரணாக இருக்கும் மேற்கு தொடர்ச்சி மலை இருப்பதால் அங்கு மழைக்கும் பஞ்சமில்லை. தண்ணீருக்கும் பஞ்சமில்லை. முறையாக தண் ணீரை சேமித்து வைக்கும் பட்சத்தில் வருடம் முழுவதும் தண்ணீருக்கு தட்டுப்பாடு இல்லாமல் அந்த பகுதி மக்களால் வாழ்ந்துவிட இயலும்.

கிழக்கு எல்லைப் புறம் வருவோம். ஜூன், ஜூலை பருவமழையை இப்பகுதிகள் எப்போதும் நம்புவதில்லை. டெல்டா பகுதிகள்

முழுவதும் காவேரியின் கடைக்கண் பார்வைக்கு காத்திருக்கும் பகுதிகள்தான். ஆனால் செப்டம்பர் இறுதி துவங்கி அக்டோபர், நவம்பர், மற்றும் டிசம்பர் மாதங்களில் நல்ல மழை பொழிவினை பெறுகின்றன இந்தப் பகுதிகள். இருப்பினும் ஒவ்வொரு வருடமும் மக்கள் தண்ணீருக்கு திண்டாடுவதற்கான காரணங்கள் என்ன?

கழிவுநீரை குடிநீராக சுத்தகரிக்கும் பணி துவங்கியது! கடல்நீரை குடிநீராக்கும் பணி துவங்கியது! ஏப்ரல் மாதத்திற்கு பிறகு தண்ணீர் தட்டுப்பாட்டினை சரி செய்ய மிகவும் தொலைநோக்கு பார்வையுடன் அறிவிக்கப் பட்ட திட்டங்கள் இவை இரண்டு மட்டுமே. ஆனால் இந்த திட்டங்களை நாம் எப்போது முன்னெடுத்திருக்க வேண்டும்? தட்பவெட்பநிலை

# வருங்காலத்தில் தண்ணீர் தட்டுப்பாடு உருவாகாத வகையில் திட்டங்கள் அமைக்கப்படுமா?



மாற்றங்களால் ஏற்படும் பஞ்சங்கள், இழப்புகளை சரிசெய்வதற்கு என்றும் நாம் தற்காலிக முடிவுகளை தேர்வு செய்துவிட்டால் பிரச்சனைகள் சமாளிக்க முடியாததாகவேதான் இருக்கும்.

## சென்னையும் தண்ணீர் தட்டுப்பாடும்

சென்னையில் மழை பெய்ய வேண்டும் என்றால் வேலூரில் இருக்கும் மலைத் தொடர்களில் இருந்தோ, சித்தூரில் இருக்கும் நாகரி மலைத் தொடர்களில் இருந்தோ மேகங்கள் உருவாகி அது சென்னை பகுதிக்கு நகர்ந்து வந்தால் மட்டுமே மழை சாத்தியம் ஆகும்.

வடகிழக்கு பருவமழை முடிந்த பிறகு தோராயமாக ஆறு மாதங்களுக்கு (டிசம்பர் முதல் வாரம் மே முதல் வாரம்) வரை மழையை எதிர்பார்ப்பது என்பது கற்பனைதான். இந்த மழையற்ற வறண்ட வானிலை என்பது இன்று நேற்று உருவானது இல்லை. 20 வருடங்களாக சென்னையில் மழை பெய்வது இந்த பேட்டனில் தான். இது நம் அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகவே இருக்கும் பட்சத்திலும் இறுதி நேர திட்டங்கள், நடைமுறையில் இருக்கும் தண்ணீர் தட்டுப்பாட்டினை தீர்ப்பதில்லை.

## தமிழ்நாடு வெதர்மேன் வெளியிட்ட புள்ளி விபரம்

சென்னையின் வருடாந்திர மழைப் பொழிவு (Chennai Annual Rainfall)

சென்னைக்கு வருடத்திற்கு சராசரியாக 1400 எம்.எம். மழை கிடைக்கிறது. இது இந்திய நகரங்களான பெங்களூரு, கோவை, மதுரை, மைசூர், விஜயவாடா, விசாகப்பட்டினம், அகமதாபாத், புனே, சூரத், ராஜ்கோட், மும்பை போன்ற நகரங்களில் கிடைக்கும் மழையின் அள வினை விட மிக அதிகம்.

மக்கள்தொகைநெருக்கம், அடர்த்தி, அவர்களின் அன்றாட தேவை போன்ற காரணங்கள் மட்டும் தண்ணீர் பஞ்சத்தினை உருவாக்கிவிடுவதில்லை. முறையான தொலைநோக்குப் பார்வையுடன் கட்டமைக்கப்படாத நகர்புறம், மழை நீர் நிலத்திலும் கூட விழுவதற்கு மண் இல்லாத கான்க்ரீட் பூமி, நாளுக்கு நாள் குறைந்து வரும் மரங்களின் எண்ணிக்கை அனைத்தும் இந்த பெரும் தண்ணீர் பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்துள்ளது.

## தோல்வி அடைந்த மழை நீர் சேகரிப்புத் திட்டம்

குளங்களை ஆக்கிரமித்து வீடுகள் கட்டி விட்டார்கள், ப்ளாட் போட்டு விற்று விட்டார்கள் என்ற புலம்பல்களை தவிர்த்துவிட்டு, இனி வரும் காலங்களில் நீர் விசயத்தில் தன்னிறைவோடு இருப்பது எப்படி ?

“கட்டாய மழை நீர் சேகரிப்புத் திட்டம்” எங்கேயே கேட்ட குரல் போன்று இந்த வார்த்தைகள் உங் களின் காதுகளில் வந்து விழக்கூடும்.



**- கே.தாந்தோணி**

மாநில இளைஞரணித் தலைவர்,
அயன்புரம் மண்டலச் செயலாளர்,
செய்தி நிருபர், தமிழ்நாடு நுகர்விழி

# வாட்ஸ் ஆப் அட்மின்களுக்கு எச்சரிக்கை

பேஸ் புக் வந்தபோது, தனது கணக்கில் பல நண்பர்களை சேர்த்து, எனக்கு 1,000 பேஸ்புக் நண்பர்கள் என்று பெருமைபடும் காலம் ஒன்று இருந்தது.

அது இப்போது சற்று மாறி, வாட்ஸ்ஆப்பில் நான் அட்மின் ஆக இருந்து ஒரு குருப் ஆரம்பித்துள்ளேன். அதில் இத்தனை நபர்கள் சேர்ந்துள்ளார்கள் என்று பெருமைப்படும் காலம் இது. இன்று வாட்ஸ்ஆப்பில் குருப் ஆரம்பிக்காத நபர்களோ அல்லது குருப்பில் இல்லாத நபர்களே மிக மிக குறைவு.

### பேஸ்புக் கொடுத்துள்ள அதிகாரம்

.பேஸ்புக்கில் ஒரு குருப் ஆரம்பித்தால், அந்த குருப்பின் அட்மின் (நிர்வாகி), அந்த குருப்பில் இருக்கும் உறுப்பினர்கள் பதிவிடும் பதிவு களை கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்டு.

உதாரணமாக, ஒரு உறுப்பினர் இடும் பதிவை, குருப் அட்மின் அனுமதி கொடுத்த பிறகுதான், அந்த குருப்பில் வெளியிடுமாறு செய்யலாம். அல்லது உறுப்பினர் இடும் பதிவுகளை அட்மின் உடனடியாக அழித்து விடலாம். ஆக, அந்த குருப்பின் முழு அதிகாரம் அட்மினிடம் இருக்கும்.

பதிவுகளை முற்றிலும் அழிக்க முடியாது

.ஆனால், வாட்ஸ்ஆப் குருப் அப்படிப் பட்டதல்ல. இதில் அட்மின் ஆக இருப்பவர் உறுப்பினர்கள் இடும் பதிவுகளின் அனுமதியை மறுக்க முடியாது மற்றும் உறுப்பினர்கள் இட்ட பதிவுகளை அழிக்க முடியாது. அவ்வாறு அழிக்க முயற்சித்தாலும், அட்மினின் மொபைலில் இருந்து மட்டுமே அந்த பதிவு அழிக்கப்படும். ஆனால் மற்ற உறுப்பினர்களின் மொபைலில் அந்த பதிவு தொடர்ந்து இருக்கும்.

### அட்மின்களின் பொறுப்பு அதிகம்.

.பேஸ்புக்கை விட வாட்ஸ் ஆப் அட்மின்னிற்கு பொறுப்புநிலை அதிகமாகின்றது.



அவரது குருப்பில் உள்ள உறுப்பினர்களானவர்கள் யவரை பற்றியான அவதூறான பதிவுகளை இடாமல்இருக்கவேண்டும். அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகள், பிரதம மந்திரி, முதல்வர் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள், தனிநபர்கள் மீது ஆதாரமற்ற அவதூறான தகவல்களை பரப்பினால்



(அந்த தகவல்கள் அவருடைய தகவலாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை... மாறாக மற்றவர் அவருக்கு அனுப்பிய தகவலை குருப்பில் பரப்பினாலும்) அதற்கு அட்மின்தான் அவ்வாறான தகவலை பதிவு செய்தவருடன் சேர்ந்து இந்திய தண்டணை சட்டம், தீங்கியல் சட்டம் மற்றும் ஐ.டி.சட்டம் 2000ன் படி தண்டனைக்குள்ளாவார்கள்.

## யாரோ செய்த தவறு

யாரோ செய்த தவறுக்கு அட்மின்னும் சிறைக்குள் செல்ல வேண்டியது இருக்கும் என்பதை அட்மின்கள் உணரவேண்டும். ஒருவர் தவறாக இட்ட ஒரு பதிவை ஸ்கிரின்ஷாட் எடுத்து தகுந்த அதிகார அமைப்பிடம் நடவடிக்கை எடுக்க யாராகிலும் கொடுத்தால், அட்மின்னிற்கு ஆபத்துதான்.

## எப்போது வேண்டுமானாலும் ஆபத்து வரலாம்!

.குருப்பின் அளவு பெரிய அளவில் ஆகும்போது அட்மினின் பொறுப்புநிலையும் அதிகமாகின்றது. அவர் அடிக்கடி அந்த குருப்பை கண்காணிக்கும் நிலை ஏற்படுகின்றது. இவ்வாறு கண்காணித்தாலும், குருப்பில் இட்ட பதிவுகளை அட்மினால் அழிக்க முடியாது என்பதால், அட்மின் நிலையானது எப்போதுமே “கத்தி மேல் நின்று கொண்டிருக்கும் நிலைதான்”.


## எச்சரிக்கையாக இருங்கள்

.ஆகவே, வாட்ஸ்ஆப் குருப்பில் அட்மின் ஆக இருப்பது பெருமையான விஷயம் அல்ல. மாறாக, இன்றைய சூழ்நிலையில் ஆபத்தான விஷயமும்கூட. ஆகவே, ஒரு குருப்பை நானும் நிர்வாகிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, தேவையற்ற வகையில், குருப்பை உருவாக்குவதை தவிருங்கள். அதையும் மீறி ஒரு குருப் நிர்வாகிக்க வேண்டும் என்றால், “அவதூறான பதிவுகள் போடவேண்டாம்“ என்று அடிக்கடி எச்சரிக்கை விடுங்கள். உறுப்பினர்கள் யாராவது அவதூறான பதிவுகள் போட்டால் உடனே, அந்த உறுப்பினரை நீக்கம் செய்யுங்கள் மற்றும் உறுப்பினர்கள் தொடர்ந்து அந்த செயலை செய்தால், அந்த குருப்பை உடனே மூடி விடுங்கள். அதுதான் அட்மின்களுக்கு நல்லது. .

## அடுத்தவர் செய்யும் தவறுக்கு

அடுத்தவர் செய்யும் தவறுக்கு, நீங்கள் சிறைக்கு செல்ல வேண்டுமா என்பதை ஒரு குருப்பை உருவாக்கி அதற்கு அட்மின் ஆவதற்கு முன்னால் ஒரு முறைக்கு பல முறை யோசியுங்கள்.

முகநூல் நண்பரும் வழக்கறிஞருமான திரு Leenus Leo Edwards அவர்கள் முகநூலில் பதிவிட்ட இன்றைய (12.01.2018) அருமையான எச்சரிக்கைப் பதிவு இது.




# உலகிலேயே அதிகமாக சிலை நிறுவப்பட்ட தலைவர்!

## பி.ஆர்.அம்பேத்கர்

**சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகள் ஜனநாயகத்தை அழிக்கின்ற கரையான்கள் ஆகும். ஆதலால் மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்கள் செயல்முறைகள் ஆகியவற்றைக் கொண்டதே உண்மையான ஜனநாயகம் ஆகும்.**

அம்பேத்கரை தெரியாதவர்கள் இல்லை என்பதை போலவே அவரை முழுமையாக அறிந்தவர்களும் இல்லை. இந்தியாவின் சட்ட அமைப்பை உருவாக்கியவர், சுதந்திர சட்ட அமைப்பை உருவாக்கியவர், சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ஜாதிய ஏற்றத் தாழ்வுகளுக்காகப் போராடியவர். இவைதான் பெரும்பாலானோருக்கு அவரைப் பற்றி தெரிந்தது.

உண்மையில்பி.ஆர்.அம்பேத்கர் அவர் காலத்தின் மிகச்சிறந்த சிந்தனை யாளர்களில் ஒருவர். உலகம் முழுக்க இருந்த சிந்தனையாளர்களில் அம்பேத் கர் அளவுக்கு மக்கள் செல்வாக்கு மிக்க தலைவராக இருந்தவர்கள் பெரியார், மார்க்ஸ் போன்ற மிகச்சிலரே, தன் வாழ்நாளின் பெரும்பகுதியை நூலகத்திலும் நூல்களை வாசிப்பதிலேயுமே செலவிட்டவர். எழுதுவது மட்டும் அல்லாமல் நேரடியாக மக்களிடம் சென்று அவற்றைச் சொன்னவர், அவர்களை அரசியல்படுத்தியவர், அவர்களின் விடுதலையைப் பற்றி மட்டுமே சிந்தித்தவர்.




வரலாறு, தத்துவம், மதநூல்கள், சமூகவியல், அரசியல், சட்டம், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிகச்சிறந்த ஞானம் உடையவர். பண்டைய



இந்தியாவின் வாணிபம், இந்தியாவைப் பரவலாக்குதல், ரூபாய் பிரச்சினைக்குத் தீர்வு போன்ற முக்கியமான பொருளாதாரக் கட்டுரைகள் முதல், இந்தியாவில் சாதிகள் போன்ற சமூகவியல் கட்டுரைகள் வரை பல துறைசார்ந்த ஆய்வுகளைச் செய்தவர். அரசியல் ஈடுபடும் முன் பொருளாதார அறிஞராகவும், பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் வழக்குரைஞராகவும் பணியாற்றியிருக்கிறார்.

இத்தனை சாதனைகளையும் அவர் ஒடுக்கப்பட்ட சமூக, குடும்பப் பின்னணியில் இருந்து வந்துதான் செய்திருக்கிறார். வாழ்வின் அடிமட்டத்தில் இருந்து உருவாகி, வளர்ந்து ஒரு மனிதன் ஒட்டுமொத்த மானுடகுலமும் எல்லா காலத்திலும் வியக்கும் வண்ணம் வாழ்ந்திருக்கிறார் என்றால் அவர் பீமாராவ் அவர்கள் மட்டுமே.

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள மகர் எனும் தாழ்த்தப்பட்ட இனத்தில் பிறந்த ஒரே காரணத்துக்காக இந்த மாமேதை தன் வாழ்நாள் முழுவதும் பல்வேறு தருணங்களில் அவமானப்படுத்தப்பட்டுக்கொண்டே இருந்தார். பள்ளியில் தனிக்குவளையில் நீர் வழங்கப்பட்டதில் தொடங்கி சட்ட அமைச்சரான பிறகுகூட சாதிய வன்கொடுமை அவரைத் தொடர்ந்துகொண்டே இருந்தது. ஒரு நடு வழியில் இறக்கிவிடப்பட்டார். சட்ட அமைச்சராக இருந்தபோது ஒரு குமாஸ்தா, அவர் ஆணையை ஏற்க மறுத்தார். இப்படிப்பட்ட அவமானங்களால் அவர் துவண்டுவிடவில்லை. மாறாக தன் வாழ்நாள் முழுவதும் சாதியத்தின் வன்முறைக்கு எதிராக மிகத் தீவிரமாகப் போராடினார். இனம், மொழி, ஜாதி, மதம், வர்க்கம் என அனைத்துக்கும் அப்பாற்பட்ட மனித நேயத்தை மையமாகக் கொண்டே அரசியல் சாசனம் ஒன்றை நமக்குக் கொடுத்தார்.

ஒருமுறை அம்பேத்கர் லண்டன் சென் றிருந்த போது அங்கு இவரை அழைத்திருந்தவர்கள் எங்கு தங்க விரும்புகிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு இவர் கேட்டுக்கொண்டது, எங்கு நூலகம் அருகில் உள்ளதோ அங்கே ஏற்பாடு செய்ய முடியுமா? என்பதைதான். புத்தகங்களின் மேலும் வாசிப்பின் மேலும் அவ்வளவு காதலுடையவர். உலகிலேயே அதிக சிலைகள் கொண்ட தலைவர்களில் ஒருவர் என்று ஒருமுறை கன்ஷிராம் இவரை வர்ணித்தார்.

# தனியே செல்லும் பெண்களே...

**சில மரணங்கள், நமக்குப் பாடமாகிவிடுகின்றன. சென்னை, சிறுசேரியில் கொடூரமாக கொலை செய்யப்பட்ட இளம் சாஃப்ட்வேர் இன்ஜினீயர் உமா மகேஸ்வரியின் மரணமும் அப்படித்தான்!**

இரவில் பணி முடித்துவிட்டு, காதுகளில் 'ஐ பேடை' மாட்டியபடி கிளம்பிச் சென்ற அந்தப் பெண்ணை வட இந்திய காமுகர்கள் சிலர் பலி கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுவிட்டனர். எனினும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பாக இந்த மரணம் அநேக கேள்விகளை எழுப்பியிருக்கிறது. இது குறித்து எழுத்தாளரும் முன்னாள் டி.ஜி.பி.யுமான திலகவதியிடம் பேசினோம்.

பெண்கள் படிக்கவும் வெளியில வேலைக் குன்னும் வர ஆரம்பிக்கும்போதே தங்களைத் தாங்கள்தான் காப்பாத்திக்கணும்ங்கிற உணர்வு இன்னிக்கு ஒவ்வொரு பெண்ணுக்கும் வரணும்ங்க!

வீட்டோட இருக்கிற வரை குடும்பத்தார் பாதுகாப்பாக இருப்பாங்க, திருமணம் பண்ணிட்டா கணவர் பாதுகாப்பு அளிப்பார்ன்னு சொல்லி பிறரைச் சார்ந்தே இருக்கும்படியே தலைமுறை தலைமுறையா பெண்களை பழக்கப்படுத்திட்டாங்க. அந்த மனநிலையில் இருந்து முதல்ல பெண்களான நாம் மாறி வரணும்.

தங்களுக்கான முடிவுகளை யாரோ எடுப்பாங்க, தங்களுக்கான பாதுகாப்பை வேற யாரோ தரணும்'னு பெண்கள் இன்னும் நினைக்கிறாங்க. ஆனா, இன்னைக்கு இருக்கிற சூழல், பெண்ணுக்கு அவங்க வீடு கூட பாதுகாப்பா இல்லை. ஏன்னா பல பத்திரிகைச் செய்திகளை நாம் பார்த்தால் குடும்பத்துக்கு உள்ளேயே குடும்ப உறவுகளாலேயே நடக்கிற வல்லுறவுகளை நாம் நிறையக் கேள்விப்படறோம். ஆகவே ஒவ்வொரு பெண்ணும்தான் தன்னைத்தானே காத்துக்கொள்ள பழக வேண்டும்.

ஒரு அபாயம்னு வரும்போது அதிலிருந்து தன்னை காத்துக்கொள்ள சுலபமா என்ன செய்றதுன்னு தெரியணும்.

கராத்தே ஜூடோன்னு தற்காப்புக் கலைகள் தெரிஞ்சிருந்தாக்கூட, ஒரு பிஸ்டல் வச்சிருந்தாக்கூட, ஒரு பெப்பர் ஸ்பிரேயர் வச்சிருந்தாக்கூட அதை எப்படி எடுக்கணும், எப்படி யூஸ் பண்ணணும்கிறது முக்கியம். குறிப்பா அந்தச் சூழலை பெண்கள் பதற்றப்படாமல் எதிர்கொள்வது முக்கியம். இவங்களே படபடப்பாயிட்டாங்கன்னா எதையுமே ஹேண்டில் பண்ண முடியாமப் போயிடும். அதாவது, எது வந்தாலும் சமாளிப்போம்கிற மன உறுதி இருக்கணும்.

எந்த நேரத்திலும் எந்த இடத்தில் இருந்தும் அபாயம் நம்மைத் தாக்கலாம். அந்த அபாயம் எதிரே வர்ற ஒரு ஆண் உருவிலும் இருக்கலாம். ஒரு ஆபிஸர் உருவிலும் இருக்கலாம்; உறவினர் ரூபத்திலும் இருக்கலாம் அலுவலக ரீதியாகவும் இருக்கலாம் கூடப்பழகும் பெண்கள் கூட கும்கி யானை மாதிரியான வேலையைச் செய்யமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? அதனால சுலபமா யாரையும் நம்புறது தப்பு. நான் படிச்சிருக்கேன், வேலைக்கு வந்திருக்கேன், சம்பாதிக்கிறேன், பேங்க்ல பணத்தைப் போட்டிருக்கேன், எல்லா டிரான்ஸாக்‌ஷனும் நெட்ல பண்ணிக்கிறேன் அதனால எனக்கு ஒரு அபாயமும் வராதுன்னு நினைச்சு நீங்க அலட்சியமா இருக்கக்கூடாது.

உங்களுக்கு கார்டியன்ஸ் யார் யார்? அவங்களைத் தொடர்புகொள்றது எப்படி? அலுவலகத்தில் தவறு நடந்தால், அங்கு நீங்கள் புகார் தரவேண்டிய நபர் யார்? உங்க ஏரியாவில் உள்ள போலீஸ் நிலையம் எது? அவங்களுடைய எண்கள் என்ன? உங்களுக்கு நேரக்கூடிய அபாயங்களிலிருந்து காப்பாற்றாக்கூடிய அரசுத்துறைகள் என்னென்ன? இந்தத் தகவல்கள் எல்லாம் வச்சிருக்கணும்!

ஒரு ஹாஸ்டல்லேயோ அல்லது வீடு எடுத்தோ தங்கியிருக்கீங்க! அங்க நீங்க போகணும்னா, எந்த நேரத்தில் போகப் போறீங்க? அங்க பஸ் சர்வீஸ் எப்படி இருக்கு? ஆட்டோ ஸ்டாண்ட் எங்க இருக்கு? இந்தத் தகவல்கள் விரல் நுனியில் இருக்கணும்.

சில அலுவலகங்களில் இருந்து வீட்டுக்குப் போக, வாகனங்கள் தரப்படுதுன்னா, ஒரு குரூப்பாத்தான் அவங்க லிங்க் பண்ணி அனுப்புவாங்க. அதுக்குன்னு டைமிங்ஸ் வச்சிருப்பாங்க. அதுக்கு பொறுப்பா ஒருவரை நியமிச்சிருப்பாங்க. அவங்களுக்கு நீங்க முறையா தகவல் கொடுக்கணும்.

அடுத்தபடியா நீங்க பயணிக்கிற நாள், எத்தகைய நாள்? அதுக்கு முன்தினமோ, அன்று காலையோ, அன்று மாலையோ நடந்த சம்பவங்கள் என்ன? என்கிற செய்திகள் உங்களுக்குத் தெரியணும். அன்றைக்கு மாணவர்கள் கலகம் நடந்திருக்கலாம். ஒரு டிரைவர் அடிக்கப்பட்டார் என்பதற்காக ஒரு ஸ்டிரைக்கை ஓட்டுனர்கள் மேற்கொண்டிருக்கலாம். அன்று ஒரு கட்சி தர்ணா நடத்தக்கூடும். எனவே வழக்கமான பஸ்ஸை அன்று நீங்கள் எதிர்பார்த்துப் போக முடியாது. எனவே செய்திகள், ஆபத்துகால உதவிகள், நபர்கள் எல்லாம் தெரிஞ்சிருக்கணும்.

ரயிலில் ஜாலியா கைகால்களை நீட்டி கிட்டுப் போகலாம்னு ஆளில்லாத பெட்டியில் ஏறாதீங்க நெருக்கடியான பெட்டியாக இருந்தாலும்கூட, அங்கு உங்களின் உயிருக்கு பாதுகாப்பு இருக்கும். அது மாதிரி சிந்திக்கத் தெரியணும்.

நடந்து போறதா இருந்தா அதுக்கும் முறையான வழி இருக்கு. குறுக்கு வழியை



என்றைக்குமே தேர்ந்தெடுக்கக்கூடாது. கொஞ்சம் காலமாகும்னாலும் கூட, அதிகப்படியான மக்கள் புழங்கக்கூடிய, வெளிச்சம் மிகுந்த ஆட்டோ ரிக்ஷா ஸ்டாண்டுகளோ, டீக்கடைகளோ இருக்கக்கூடிய, ஜன நடமாட்டம் உள்ள பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அதுல நடக்கணும். இரவு நேரத்துல நடந்து போறீங்க என்கிற உணர்ச்சியுடனும் உங்களுக்கு முன் செல்பவர்கள் யார், பின் தொடர்ந்து வருபவர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவங்க நடை எப்படிப்பட்டது? என்பதை உள்வாங்கி நடப்பவர்களாக உங்கள் நடை இருக்க வேண்டும்.

ஆனா, ரெண்டு பக்கமும் காதுல வயரை மாட்டிகிட்டு இசை என்கிற இன்ப வெள்ளத்தில் நீச்சல் அடிச்சிகிட்டு போனா இது எப்படி சாத்தியமாகும்? ஆபத்துகளுக்கு கவனச் சிதறல்தான் முக்கியமான காரணம்.

இதையெல்லாம் தாண்டி பணம் பறிக்கிறதுக்காக ஒருவன் தாக்குறான்னா, நீங்களே முதல்ல ஹேண்ட் பேக்கை கொடுத்துட்டு உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். இல்லைன்னா காப்பாத்துங்கன்னு சத்தம் போடுங்க. சத்தம் போட்டால், யாராவது உதவ வருவாங்க. அப்புறம் உங்களுக்கு ஜூடோ, கராத்தே தெரியலைன்னாலும் கூட ரெண்டு விரலை உயர்த்தி எதிராளி கண்களில் குத்த முயற்சிக்கலாம். தற்காப்புக்காக அந்த இடத்தில் சமயோசிதமாக செயல்பட்டு தப்பிக்க முயற்சிக்கணும்.

எல்லா இடங்களிலும் இன்னிக்கு குடி இருக்க. குடிக்காம இருக்கிறப்போ நல்லவங்களா இருங்கிறவங்களும் கூட குடிச்சப்புறம் என்ன செய்வாங்கன்னு தெரியலை. அந்த அளவுக்கு அறம் சார்ந்த வாழ்க்கை இல்லை. இன்னாருடன், இந்த முறையில்தான் உறவுகள் அமையவேண்டும் என்கிற எழுதப்படாத விதிகள் எல்லாம் இன்னிக்கு மண்ணைக் கவ்விக்கிட்டு இருக்கு போதையின் நாட்டத்திலும் புலன் நாட்டத்திலும் வீடியோ கேமராக்கள் நம்முடைய செல்போன்கள் இவற்றால் பெண்கள் மீதான மரியாதை மட்டுப்படுத்தப்படுகிறது. விளம் பரங்களில் தொடங்கி அனைத்து ஊடகங்கள், திரைப்படங்கள் ஆகியன பெண்கள் மீதான மதிப்பை அழிக்கின்றன.

இதையெல்லாம் செய்யாமல், இதற்காக போலீஸையோ சம்பந்தப்பட்ட நிறுவனங்களையோ குற்றம்சாட்டுவது எதிர்கால உமா மகேஸ்வரிகளைக் காப்பாற்ற உதவாது.

நிறுவனங்கள் வேலை கொடுக் கிறாங்க, சம்பளம் கொடுக்கிறாங்க. கம்ப்யூட்டர் கொடுக்கிறாங்க, அதுக்கப்புறம் வேலை முடிஞ்சு வீட்டுக்குப் போறதுக்காக ஒரு வண்டியும் கொடுக்கிறாங்க. அந்த வண்டியில் ஒரு செக்யூரிட்டியையும் அனுப்புறாங்க. அதை ஆர்கனைஸ் செய்ய ஹெச்.ஆரில் ஒரு டிவிஷனையும் வைக்கிறாங்க. இதுக்கு மேல என்ன எதிர்பார்க்கிறீங்க? இதையெல்லாம் நீங்கதான் சரியா பயன்படுத்தணும்.

படிச்சிட்டா போதாது. சம்பாதிச்சுட்டா போதாது. நம்மைக் காப்பாத்திக்க வேண்டியது நாமதான். நாம மட்டும்தான்! என்கிற உணர்வு ஒவ்வொரு பெண்ணுக்கும் வரணும் வரவேண்டிய காலமிது.

**ஏமாற்றும் விளம்பரங்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது. அதைத் தடுக்க பல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது ஏற்கனவே விளம்பர கவுன்சில் ஆப் இந்தியா** (ASCI - Advertising Standards Council of India) **என்ற ஒரு அமைப்பு விளம்பரதாரர்களால் நிர்வகிக்கப்பட்டு சுயக்கட்டுப்பாடு என்ற கொள்கையின் மூலம் ஏமாற்றும் விளம்பரங்களை நிறுத்த முயல்கிறார்கள்.**

அது திறனுள்ளதாக இல்லை. ஏனெனில் விளம்பரம் வந்தபிறகு, இவர்கள் புகாரைப் பெற்று நடவடிக்கை எடுக்கவே ஒரு மாதமாகி விடுகிறது. மறுபடியும் திருத்திய விளம்பரம் கொடுக்கச் சொல்லி வலியுறுத்த அதிகாரம் இல்லை. இது தற்போது வர இருக்கும் புதிய உபயோகிப்பாளர் பாதுகாப்பு சட்டத்தில் இதற்கு உரிமைதரப்பட்டிருக்கிறது.

மத்திய அரசு ஏமாற்றும் விளம்பரங்களை கண்காணிக்க ஒரு கமிட்டி அமைத்துள்ளது.

இக்கமிட்டியில் கட்டுரை ஆசிரியர் GAMA (Grievances Against Misleading Advertisements ) உறுப்பினர் ஏமாற்றும் விளம்பரங்களுக்கு எதிராக புகார் மையம் ஒன்றை http://gama.gov.in ஏற்படுத்தியிருக்கிறது. அந்தக் கமிட்டியில் உள்ள நுகர்வோர் சங்கங்கள் மூலமாக புகார் செய்யலாம்.

ASCI, VCO

உணவு, விவசாயம், உடல்நலம், கல்வி, ரியல் எஸ்டேட், போக்குவரத்து மற்றும் நிதி சேவைகள் ஆகிய துறைகளின் ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள் இதற்கு உதவியாக இருப்பார்கள்.

ஏமாற்றும் விளம்பரங்கள் எவ்வகைப்படும் என்றும், அதற்கு எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சற்று பார்ப்போம்.

ஏமாற்றும்/திசைதிருப்பும் விளம்பரங்கள் என்றால் என்ன?

1. ரேடியோ, தொலைக்காட்சி, செய்தித்தாள், போஸ்டர், நோட்டீஸ், சுவற்றில் எழுதுவது மூலமாக அந்தப் பொருளின் இயற்கை குணத்தை, குணாதிசயங்களை, தரத்தை அல்லது அதனுடைய பூகோள பூர்வீகத்தை அல்லது சேவையை வர்த்தக நடவடிக்கைகளை தவறாக சித்தரித்தால் பொதுவாக அது ஏமாற்றும்/ திசை திருப்பும் விளம்பரம் எனப்படும்.

2. ஒரு நுகர்வோராக அது மாதிரி விளம்பரங் களைப் பார்த்தால் நான் என்ன செய்ய



# ஏமாற்றும் விளம்பரங்கள்: எங்கே, எப்படி புகாரளிப்பது?

வேண்டும்? அந்த விளம்பர நகலுடன், வீடியோ, ஆடியோவுடன் நீங்கள் மத்திய அரசின் http://gama.gov.in என்ற வலையத்தில் உங்கள் புகாரை பதிவு செய்யலாம்.

*3.* புகாரை எப்படி பதிவு செய்வது? முதலில் ஒருமுறை பதிவு ஒன்றை புகார் கொடுப்பதற்காக பதிவு செய்ய வேண்டும். இணையதளத்திற்குப் போய் பதிவு செய்து User Id மற்றும் கடவுச் சொல்லை உருவாக்கிக் கொள்ளுங்கள். பின்னர் உங்கள் அடையாள IDஐயும், கடவுச் சொல்லையும் பயன்படுத்தி இணையதளத்திற்குள் சென்று அது கேட்கும் தகவல்களைப் பதிவு செய்யவும். தேவையான ஆடியோ, வீடியோ, போட்டோ, பேப்பர் கிளிப் ஆகியவற்றை பதிவேற்றம் (Up-load) செய்யவும்.



*4.* நான் எப்படி புகாரின் நிலையை தெரிந்து கொள்வது? அதே யூசர் ID மற்றும் கடவுச் சொல்லை பயன்படுத்தி இணையதளத்திற்குள் சென்று ட்ராக் செய்யலாம்.

*5.* என் புகார்மீது என்ன நடவடிக்கையை நான் எதிர்பார்க்கலாம்? உங்கள் புகார் அந்தந்த அரசுத்துறை சுயக்கட்டுப்பாடு நிறுவனம் ஆம்பட்ஸ்மன்/எல்லாவற்றிக்கும் அனுப்பப்படும்.

எப்பொழுது ஒரு விளம்பரத்தை ஏமாற்றும்/திசைதிருப்பும் விளம்பரம் என்று சொல்லலாம்?

*1.* ஒரு சமையல் எண்ணெய் விளம்பரம் அந்த எண்ணெயை உபயோகிக்கும் வரை உங்களுக்கு இதயப் பிரச்சினை வராது என்று விளம்பரப் படுத்தினால் அது ஏமாற்றும் விளம்பரம் (உண்மையற்ற ஒன்றைக் கூறும் விளம்பரம்)

*2.* பாக்டீரியாவை மட்டும் வடிகட்டும் குடிநீர் சுத்தப்படுத்தும் கருவி (வைரஸை வடிகட்டாது) *100* சதவிகித சுத்தமான குடிநீரை தருகிறதென்று விளம்பரப்படுத்தப்பட்டால் அது ஏமாற்றும் விளம்பரம்.

*3.* ஒரு செல்போன் கம்பெனி ஒரு நிமிடத்திற்கு *40* பைசா STD கட்டணம் என்று விளம்பரப்படுத்துவது ஆனால் குறிப்பிட்ட வசதியை அந்த கம்பெனியின் சேவை பெறும் எண்களுக்கு மட்டும் கட்டுப்படுத்துவது தவறான விளம்பரம்.

*4.* ஒரு குளிர்சாதனப்பெட்டி அதனுள் வைக்கப்படும் உணவுகளை கிருமிகள் அணுகாமல் வைத்திருக்கும் என்று அதற்குரிய புள்ளிவிவரங்கள்/ஆராய்ச்சி இல்லாமல் சொல்வது ஏமாற்றும் விளம்பரம்.

*5.* மின்விசிறி/மின்விளக்கு *20* சதவிகித மின்சாரத்தை மிச்சப்படுத்துகிறது என்று ஆதாரமில்லாமல் சொல்வது திசைதிருப்பும் விளம்பரம்.

*6.* ஒவ்வொரு தடவையும் அப்பொருள் வாங்கும்போது இலவச அன்பளிப்பு தரப்படும் என்று விளம்பரப்படுத்திவிட்டு இலவசப் பொருளின் விலையை வாங்கும் பொருளுடன் (முழுவிலை இல்லாவிடினும் *75* சதவிகித விலையை) சேர்த்து விற்றால் அது ஏமாற்றும் விளம்பரம்.

*7.* தள்ளுபடி விற்பனை அறிவிக்கும்போது எவ்வளவு நாள் தள்ளுபடி, எவ்வளவு சதவிகிதம், எந்தெந்த பொருளுக்கு? வெகுநாட்களாக கடையில் தங்கி Shop soiled ஆகிவிட்டதாலா அல்லது குறையுள்ள துணி/பொருளா? அல்லது நாகரிகம் மாறிப்போய் விற்க முடியாத பொருளா? முன்பு விற்ற விலையிலிருந்து எவ்வளவு சதவிகிதம் என்பவற்றை நீங்கள் கேட்காமல் சொல்ல வேண்டும். இல்லாவிடில் அது ஏமாற்று தள்ளுபடி.

*8.* தலைமுடி வளர்தல், வழுக்கை மறைதல், ஆண்மை பெருகுதல், சர்க்கரை நோய், புற்றுநோய் ஆகியவைகள் குணப்படுத்த முடியாதவை, இவற்றை குணப்படுத்துவதாகக் கூறும் விளம்பரங்கள் ஏமாற்றுபவை.

*9.* முக்கிய தகவல்களை படிப்பவர்களுக்கு

எளிதில் புரியாத வகையில் சிறிய எழுத்துக்களில் தருவதும் ஏமாற்றும் விளம்பரங்களே

*10.* முகம் சிவப்பாகும் என்று கூறும் விளம்பரமும் ஏமாற்று விளம்பரமே.

*11.* இந்த பானத்தைச் சாப்பிட்டால் 90 நாட்களில் 3 மடங்கு வளர்ச்சி என்று எந்தவித ஆதாரமும் இல்லாமல் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு என்று கூறுவது ஏமாற்று விளம்பரம்.

*12.* இதே போல இன்னொரு பானம் சாப் பிட்டால் உங்கள் பையன் மற்றவர்களை விட உயரமாக வளருவான் என்று கூறுவதும் ஏமாற்றும் விளம்பரமே –இவை ஒரு பகுதி விளம்பரங்கள்:

*13.* ஹெல்த்கேர், சத்துணவு விளம்பரங்கள் ஆபத்தானவையும் கூட, ஏனெனில் அவை எதிர்விளைவுகளை ஏற்படுத்தலாம். ஹெல்த்கேர் தவிர இதர விளம்பரங்கள் இன்னொரு பகுதி.

*14.* தொழில்முறை மருத்துவர்கள் வர்த்தக ரீதியான பொருட்களை பரிந்துரைக்கக்கூடாது என்று மெடிக்கல் கவுன்சில் ஆப் இந்தியா தார்மீக நெறிகள் கூறியபோதும், பல் மருத்துவர்கள் துணிகரமாக பற்பசைகளை பரிந்துரைக்கின்றனர். வழக்குகளில் இருந்து தப்புவதற்காக அவர்கள் இங்கிலாந்தில் தொழில் செய்பவர்கள் என்ற பொய் வேறு.

*15.* காந்தப்படுக்கை: முதுகு/கழுத்துவலி போக்கும் தலையணை போன்றவையும் ஏமாற்றும் விளம்பரங்களே

நுகர்வோர்கள் விழிப்புணர்வுடன் இருந்து இப்பொருட்களை தவிர்த்தால் மட்டும் போதாது புகாரும் தர சிறிது விடா முயற்சி தேவைதான். யாராவது சிரமத்தை தாங்கினால்தான் எல்லா நுகர்வோருக்கும் பயன் கிடைக்கும்.

எங்கே புகாரளிப்பது?

Deputy Secretary (Publicity)
Department of Consumer Affairs,
Union Ministry of Consumer Affairs.
Food & Public Distribution,
Krishi Bhavan, New Delhi - 110 001.

The Advertising Standards Council of India
717/B,AURUS Chambers
SSA Amrutha Marg,
Worli, Mumbai -400 018.
Ph: 022 -2495 5076
Tollfree : 1-800-22-2724
E-mail: asci@vsnl.com
Website : http://gama.gov.ina


அமைப்பின் உறுப்பினர்களுக்கு சலுகை விலையில் CC TV கேமரா பொருத்தப்படும்.

SIGMAA TECH SOLUTIONS
Sigmaa Creating Sustainable Ambience



G.Arunagiri
Prop



We Narrow Down BMS & IBMS

- CCTV/Security Cameras
- Door Access Control
- Fire Alarm/Burglar Alarm Systems
- Fire Extinguisher/Fire Sprinkler
- Fire Hydrant
- Networking System
- PAS System / Solar System
- GPS Vehicle Traking System

# 107, Lake View Garden, Seeyathaman Koil Street,
Korattur (North), Chennai - 600 076.
**Mobile : 98410 50681 / 98412 71710**
Email: sigmatechsolutions.2007@gmail.com
Website:www.sigmaatechsolutions.com

# சந்தேகத்துக்குரிய பொருட்கள் இருந்தால் தகவல் கொடுங்கள்



**இலங்கையில் நடந்த தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து தமிழகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் போலீசார் உஷார் படுத்தப்பட்டு உள்ளனர்.**

தீவிர வாகன ரோந்து பணிகள் முடுக்கி விடப்பட்டு உள்ளன. பஸ், ரெயில் நிலையங்களிலும் போலீசார் கண்காணிப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் சென்னை மாநகர போலீசார் சார்பில் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப் பட்டு உள்ளது.

அதில் பொதுமக்கள் தாங்கள் குடியிருக்கும் பகுதிகளில் புதிய நபர்கள், வெளிநாட்டவர்கள் புதிதாக குடிவந்தவர்கள், சந்தேகத்துக்குரிய வகையில் உள்ள பரிசு பொருட்கள், சூட்கேசுகள், பேக்குகள் மற்றும் வாகனங்கள் ஏதேனும் இருந்தால் உடனடியாக 10004423454359 எனும் காவல் கட்டுப்பாட்டு அறை எண்ணுக்கோ அல்லது அருகில் உள்ள போலீஸ் நிலையத்துக்கோ உடனடியாக தகவல் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டு இருக்கிறது.


குளிர்கால யாத்ரை

மலேசியா

10 மலை முருகன் தரிசனம்

3 நாள்

~~ரூ.22,000ம்~~

ரூ.13,999ம் மட்டும்

விமானம்,விசா,பஸ், தங்குமிடம் உட்பட



இலங்கை யாத்ரை

பாடல் பெற்ற ஸ்தலம்

*திருகோணஸ்வரம் *திருகேதீஸ்வரம் உட்பட

5 நாள் ~~ரூ.25,000ம்~~

ரூ.14,999ம் மட்டும்

விமானம்,விசா,பஸ், தங்குமிடம் உட்பட

சலுகைகள் கண்டிப்பாக 3 நாட்கள் மட்டும்

5 நாள் காசி யாத்ரை ரூ.3000ம்

விமானத்தில் ஒரே நாள் சீரடி யாத்ரை ரூ.6000ம்

6 நாள் கப்பலில் அந்தமான் ரூ.9000ம்

மலேசிய சிங்கபூர் 6 நாள் ரூ.35000ம்

10+1FREE Booking for :- Nov-Dec-2018

OM YATRA

9382599089

9940377888

#266,P.H.Road,Aminjikarai,Ch-29

# மகளிர் காவல் உதவி ஆய்வாளருக்கு ரூ.1 லட்சம் அபராதம்




**மனித உரிமை மீறலில் ஈடு பட்ட தாக மகளிர் காவல் உதவி ஆய்வாளருக்கு ரூ.1 லட்சம் அபராதம் விதித்து மாநில மனித உரிமை ஆணையம் உத்தரவிட்டது.**

சென்னைத் திருவான்மி யூரைச் சேர்ந்த எல்.அருள்ராஜ் என்பவர் மாநில மனித உரிமை ஆணையத்தில் தாக்கல் செய்த மனு: நான் ஒரு பொறியாளர். எம்பேடிக் ரிசல்ட் அகாதெமி என்னும் பயிற்சி நிறுவனம் நடத்தி வருகிறேன். எனக்கு வைஷ்ணவியுடன் 12.09.2010 அன்று திருமணம் நடந்தது. நானும் எனது குடும்பத்தினரும் வரதட்சணை கேட்டுத் துன்புறுத்துவதாகக்கூறி எனது மனைவி தி.நகர் மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எம்.ஜெயலஷ்மி என்பவரிடம் புகார் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து நடந்த விசாரணைக்கு நானும் எனது தாயும் ஒத்துழைத்த போதிலும், என்னைக் கைது செய்யும்படி அவரிடம் வைஷ்ணவி வற்புறுத்தினார். அதனடிப்படையில் உதவி ஆய்வாளர் ஜெயலட்சுமி 28.12.2013 அன்று என்னைக் கைது செய்து காவலில் வைத் தார். இவ்வாறு மனித உரிமை மீறலில் ஈடுபட்ட உதவி ஆய் வாளர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறியிருந்தார்.

பரிந்துரை: இந்த மனு மாநில மனித உரிமை ஆணைய உறுப்பினர் நீதிபதி துரை. ஜெயச்சந்திரன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது பாதிக்கப்பட்ட அருள் ராஜூக்கு ரூ.1 லட்சம் நஷ்ட ஈடாக தமிழக அரசு ஒரு மாதத்துக்குள் வழங்கிவிட்டு, அதனை மகளிர் காவல் உதவி ஆய்வாளர் ஜெயலட்சுமியிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம் என்று கூறி அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உள்துறை முதன்மைச் செயலாருக்கு பரிந்துரை செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

Published by : C. Paul Barnabas. on behalf of Tamilnadu Consumer Protection Organisation, Chennai.
From its Office at No.2, Thirumuruga Nagar, Kolathur,Chennai - 600 099.
Printed by : Mr. H. Dhanasekaran at Sekar Offset Printers
No.168, Big Street, Triplicane, Chennai - 600 005.
Editor : Dr. N. Kanniah,*Phd*

**Head office : No.359 G, Konnur High Road (Pill Kington Road Junction) Ayanavaram, Chennai - 600 023. Tamilnadu, India.(Near Sayani Bus Stop & Sangeetha Mobiles )**
**Phone : 044 - 4332 4844, Cell : 99419 44999 / 94449 09993**
**E-mail : presitncpo@gmail.com, Website : www.tncpo.com, Facebook : TNCPO Chennai**



**S. கணேசன்**
மா.து.தலைவர், (கல்வி மேம்பாடு)
94442 33150



**R.வைத்தியநாதன்**
தொடர்பு அலுவலர், மருந்துக்கட்டுப்பாடு மற்றும் நுகர்வோர் நலன்
96770 64648



**அக்னி S. பாலாஜி**
தமிழ்வளர்ச்சி துறைத் தலைவர்
95972 22012



**கங்காதரன் கமலேஸ்வரன்**
மாநில து.ஆலோசகர்
99624 01967



**K.சீனிவாசன்**
மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்
98407 04377



**S. ஜெகன்பாபு**
மாநில உதவிச் செயலாளர்
98842 37456



**E.R.புவனேஸ்வரி**
தெ.செ. மாவட்ட உதவிச் செயலாளர்
79042 68026



**S.பாக்யலட்சுமி**
வடசென்னை மாவட்ட பொ.கு.உறுப்பினர்
89393 43417



**B.திருப்பதி**
வ.செ.மாவட்ட செயற்குழு
9444 402318



**M.பாலாஜி**
மாநில நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்
96001 11522



**A.பிரசாத்**
மாநில துணை அமைப்புச் செயலாளர்
81220 50409



**P. நவநீதன்**
வ.செ.மாவட்ட செயற்குழு
98842 54978



**D.S.லாரன்ஸ்**
ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்
84890 16750



**K.சிவகுமார்**
மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்
98849 50053



**M. சிவா**
மாநில துணை P.R.O.
98949 36304



**T. ரவிச்சந்திரன்**
நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
97518 60699

TAMILNADU NUGARVIZHI (Tamil Monthly) Registered News Paper - R.N.I. No: TN/T AM/2007/23434, Postal Registration No: TN/TBM/118



**D. ரமேஷ்பாபு**
மாநில துணைச் செயலாளர்
93808 88883



**M.வருண்பிரசாத்**
மாநில துணை அமைப்பாளர்
88257 39714



**M.முரளிகிருஷ்ணன்**
மாநில துணை அமைப்பாளர்
91714 05510



**V. சுகிர்தயராஜ்**
மாநில துணைச் செயலாளர்
90443 90443



**S.கண்ணன்**
மாநில புரவலர் மற்றும்
இறை வழிபாட்டுக்குழுத் தலைவர்
91710 47825



**R.முத்துக்குமரன்**
தென் சென்னை மாவட்ட அமைப்பாளர்
99400 42423



**V.பிரகாஷ்**
தெ.செ. மாவட்டச் செயலாளர்
96001 61667



**மேக்ஸ்வெல் எபனெட்டஸ் ராபர்ட்ஸ்**
மாநில துணைச் செயலாளர்
94442 23704



**விஜய் சாய்**
தேசிய அமைப்புச் செயலாளர்
98404 10168



**S.மோகன்**
வடசென்னை மாவட்ட இணைச்
செயலாளர், தொழிலாளர் அணி
98406 19321



**T.M.ஞானசேகர்**
சோழிங்கநல்லூர் கிளைத் தலைவர்
98847 97407



**H.V. சீத்தாராமன்**
வட சென்னை மாவட்ட நிர்வாக ஆலோசகர்
92442 12197



**J. கோபாலகிருஷ்ணன்**
காஞ்சிபுரம் மாவட்ட இணைச் செயலாளர்
81247 56257



**A. சத்தியா**
திருவள்ளூர் மாவட்டப் பிரதிநிதி
94448 91479



**V. புவனேஷ்வர்**
தென் சென்னை மாவட்ட நிர்வாகி
90425 64267



**M.மணீஷ்குமார்**
வடசென்னை மாவட்ட செய்தி நிருபர்
98413 99998

## பேரமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள்

ADVT